
"பரசொரூபமும்",
"ஸ்ரீபகவானும்!!!"
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



"பரசொரூபமும்"
"ஸ்ரீபகவானும்!!!"

## பொருளடக்கம்


1. வினை, மனம், விதி ---------------------------------------------௨

௨. பரமும் ஸ்ரீபகவானும் ---------------------------------------------18

௩. நான்கு சரீரங்கள் ---------------------------------------------௪௩


௪. அவஸ்தைகள் ஐந்து ---------------------------------------------50


5. நம்பிக்கை ---------------------------------------------6௪

6. நனவு, கனவு, சுஷுப்தி, சுத்தம் ---------------------------------68

7. ஸத்தியம் பேசினால் தர்மம் நிலை பெறும் --------------------7௪


எல்லாம் நீ!









# ஓம்

(ஸத்தியவாக்கை)

ஸத்தியம் பேசு — தர்மம் செய்.

நாவை அடக்கு — கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

"ஸ்ரீ ராம். ஜெயராம். ஜெய ஜெயராம். ஓம்"!

"அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம் அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும். சிறிதாம் இல்லை"!

௨

# 1. "வினை, மனம், விதி"

## இவைகளின் இயக்கம்!!!



## "ஸ்ரீ ஆனந்தகுழந்தைகளே!"

"வினை" என்றால், புண்ணியமும் பாபமும், இணைந்ததாகும். இப்புண்ணிய பாபமானது, எண்ணத்தின் பிரிவினையேயன்றி தனியாக வரவே இல்லை. அப்படியானால், புண்ணியமும் பாபமும் "ஒன்றே"!!!

இவ்வினையின் பிணைப்பு மாயா "மனமாகும்"!

மேலே சொன்ன, வினையின் மொத்த வடிவம் "காலம்" (சஞ்சிதம் பண்ணப்பட்ட உடலாகும்) ஆகும். இந்தகாலத்தை, வினையின்படி, இயங்கவைப்பது, மாயாமனமாகும். இங்கு, எண்ணம் உண்டானால் மனம் உண்டு! எண்ணம் இல்லையானால், மனம் இல்லை! இந்த மனம் தோன்றிய இடம், ஸ்ரீபகவானின், "மாயையாகும்"! ஆகவே மாயையின் மைந்தனே மனம், எனக் கொள்ள வேண்டும். இங்கு "விதி" என, யாம் சொல்வதை இரண்டாக பிரிக்கலாம். எப்படியென்றால், விதியென்றாலே இறைவன் தான். இங்கு இறைவன், இரு நிலைகளில் செயல்படுகிறான். ஒருவன் "காலதேவன்!" இங்கு மற்றொருவன்,



உ

ௐ

"கருணைமூர்த்தியாகிய"
ஸ்ரீபகவான் என்பவரும், அவரவர்
"உபாசனை" மூர்த்தியாகும்!
இப்படி பிரித்துப் பார்த்தால் தான், இச்ஜீவர்களை, எப்படி பக்குவப்படுத்துகிறார்கள், என உணர முடியும்! அவ்விருவரையும் விளக்குவது என்றால்???

1. காலதேவன் இயக்கத்தில், கண்டிப்பும், தண்டிப்பும், தோற்றும். இவன் இச்ஜீவர்களின், வினை இயக்கத்தின்படி, கருணை காட்டாத நிலையில், தயை காட்டாத நிலையில் பாரபட்ச தோஷம் இல்லாமலும், அவரவர் விதிகோச்சாரத்தின்படியும், "நடுக்கண்ட" நிலையில், (தராசின் நிறைபோலும்) நியாயம் வழங்கப்படுவதாகும். மேலும் இந்த காலதேவனை, "தருமதேவன்!" என்றும் சொல்லலாம். இவன் நீதி வழங்கும், சிம்ஹாசனத்தின் மேல் (இவன் தலைக்கு மேல்) ஓர் பெரிய பாறை, ஓர் "மயிரிழையில்!" (ரோம கணமுள்ள கயிற்றில்) தொங்கிய வண்ணம், சுழன்று கொண்டிருக்கும். இவன் ஓர் அணுப்பிரமாணம், நீதி வழுவினாலும், அக்காலதேவன், அப்பாறை அறுந்து விழுந்து, அவன் அழிவான் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். ஆகவே காலத்தை கணிக்கக் கூடியவனும், பாரபட்ச தோஷமின்றி, அவரவர் வினையின்படி, தர்மாதர்மம் உணர்ந்து, செவ்வனே செயலாற்றக் கூடியவன், "காலதேவனாகும்!"



உ

(4)

"ஸ்ரீபகவான்" என்ற கருணையின், "உபாசனாமூர்த்தி"யாகிய, இவன் இயக்கத்தில், இச்ஜீவனின் வினையின் படி, இவன் மனம் போனாலும், இச்ஜீவனானவன், இறை உணர்வோடு "சர்வார்ப்பணமாக" ஏற்று நடந்து கொள் பவனாகையால், ஜக வாச தோஷ, குண, பழக்க, வழக்கங்களால், வரும் வினைகளை, ஸ்ரீபகவான் ஏற்றுக் கொண்டு, வினையால் மனம் பின்னவிட்டாலும், ஏற்று "வந்த" வினையை மட்டும் முடிந்து, வேறு எந்த "சொந்த" வினை (ஆகாமிய வினை) தொடராமல், ஈடுபடுத்து முடிப்பதால், இங்கு ஸ்ரீபகவானின் "கண்காணிப்பால்" (மேற்பார்வையால்) நடந்து முடிந்து விடுவதால், கருணையின் இறைவன் என சொல்லப்படுகிறது!

ஆகவே முதலாவது கண்டிப்பு, தண்டிப்பு நிலை (வினை கழிவு) என்றும், இரண்டாவது கருணையின் நிலையில் கண்காணிப்பு (வினை சுலபம்) என்றும் பேசப்படுகிறது. இதை முறையே இன்னொரு வகையில், சொல்வது என்றால். முதலாவதை விதியின் வழியே மதி செல்லும் என்றும். இரண்டாவதை விதியை மதியால் வெல்லலாம், என்றும் சொல்லலாம்.



உ

(௫)

இங்கு விதியை வெல்வது என்பது,
விதியை விலக்கவோ, அழிப்பதோ இல்லை
விதியின் "வலிமையை"!
ஓரளவு குறைப்பதாகும். அதாவது அதன்
கடுமையை மாற்றி, அதை சாதகமாக மாற்றுவதாகும்!

"பக்குவப்படுத்துவது" என்றால்?

வறுமையால் வாடும் ஒருவனுக்கு, அவன் வினை அவ்வாறு இருக்குமாயின், அவன் வறுமையை போக்காமலேயே, கஷ்டங்களை மேலும் மேலும் கொடுத்து, "பணமோ ஹத்தை"! குறைப்பதற்கு, என்ன மார்க்கம் உண்டோ, அவைகளின் வழியே (வினையின் வழியே) கொண்டு சென்று, அவனை "வருத்தப்படுத்து"(ம்) பின்னர் ஓர் இனிமையை காட்டி, சாந்தி சமாதானம் செய்து, அவன் வினையை முடிவுறச் செய்வது, கண்டிப்பு கண்டிப்பு நிலையில், ஆட்படுத்துகின்ற காவ தேவனின் நிலையாகும்!

மற்றோர் நிலையில், வறுமையால் வாடும் ஒருவனுக்கு, அவன் வினை அவ்வாறு இருக்குமாயின், அவன் பக்தியின் நிலையில், சர்வார்ப்பணமாக செயல்படுவானாயின், வறுமை இருந்தாலும், அவனை வருத்தெடுக்காமல், அப்போதைக்கப்போது "அளவோடு" கொடுத்தும், அடியும் விழச்செய்தாலும், அடியின் வேதனை தோற்றுமல்,



(6)

அதை நம் "மாயா கார்யத் தால்" ஏற்றுக் கொண்டு, அவனுக்கு "நாம" சுவையை கொடுத்து, உடல் உலக கசப்பை மறக்கடித்து, "அங்கு தோன்றத் துணை" வருவான்! இதுதான் "தெய்வம் மனுஷ்யாரும்" என்ற பக்திய வாசக நிலையில் அரவணைத்துக் கொண்டு செல்லும் நிலையே, கண்காணிப்புடன், (அவன் மேற்பார்வையுடன்) "கருணையின்" நிலையாகும்! என ஸ்ரீமஹான்களின் அனுபவமாக இருக்கிறது.

"மனம்" இல்லாமல் "வினை" உண்டாகாது! "வினை" இல்லாமல் "மனம்" செயல்படாது!! இவ்விரண்டும், ஒன்றில்லையானால் ஒன்றில்லையென்பதே உண்மை. இவ்விரண்டில், எது முதலில் உண்டானது என்று கேட்டால், மனம் தான் முதலில் உண்டானது. இங்கு இன்னொரு உண்மையையும் நம் கருத்தில் கொண்டு வர வேண்டும். அது என்னவென்றால், ஸ்வயமான ஆத்மாவானது பந்தப்பட்ட தன்மையிலிருந்து அது ஜீவன் என ஆனது! இச்ஜீவனானது, ஓர் கருவுக்குள் வரும்போதே "ஆதி"யைச் சொல்லும் "சஞ்சித கர்மாவுடன்" தான், கருவுக்குள் வருகிறது. இது ஓர் "சுகமான்"! தர்மாவாகும். ஏன் என்றால் அக்கர்மாவானது,



உ

(7)

இயல்பாகவே, நடைபெற வேண்டிய ஒன்றாகும். இது உபாதை இல்லாததாகும்.

இதை எப்படி அனுபவத்தில், உணரலாம் என்றால்; ஓர் குழந்தை, பிறந்து வளரும் சமயம், உலக விஷய விபரம், தெரியாத காலங்களில், அக்குழந்தையானது, அறமோ, அபிமானமோ அதிகாரமோ, ஆதிக்கமோ, உடைமையோ, உரிமையோ, இந்த ஆறும், "நான்" செலுத்துவதும் இல்லை! இவை களால், "பிறர்" மூலமாக பாதிப்படைவதுமில்லை. அக்குழந்தைக்கு, அவ்வேளையில் "மனோபாரக் கடமைகள்" இல்லையென்றே சொல்லலாம்.

பின்னர் "ஜக வாசனையின் பழக்க வழக்கங்களால்" (வார்த்தை, செய்கைகளால்) படிப்படியாக, உலகவாசனை ஏறுவதையே "வியாதி" எனச் சொல்லலாம்.

இவ்வியாதியே, மனோவளர்ச்சி எனச் சொல்லும், மனோ பாரம் ஆகும்! இதன் மூலமாகவே, ஆகாமிய வினையெனச் சொல்லும்; முதலில் கூறிய "பிறவி வினை"! தோன்றுகிறது என உணரவும்.



(8)

உ

இவ்வினையின் தன்மை எப்படி பெருகிறது என்றால்? "நாவுக்கு" எப்படி
உப்பு, உறைப்பு, புளிப்பு என்ற நிலையால்,
"காரசாரமில்லாமல்"!
உணவு சுவைக்காதோ, அந்நிலையில், உடல், உலக உறவு,
நட்பு இனஜன பந்துக்களிடமிருந்து "மனதிற்கு", காம, குரோத, விரோத, சந்தேக, சபல,
சவனமென்னும், "ஆறு" குணங்களிருப்பும், தோன்றும்;
"காங்கம்", "கலக்கம்", "துக்கம்", "பயம்", என்னும் "நான்கு" அனுபவங்களும்,
பெருகி, பெருகி, பெருகி, பெருகி, பெருகி, பெருகி, பெருகி,
"தசகுணணணணணணசம்பந்த" (விந)
என்ற வினைப் பெருக்கம், உண்டாகி விடுகிறது.
இவ்வினையின் பெருக்கம், மாயா மனமாகும். இங்கு
மனமும் சூட்சுமம்! மேலே சொன்ன, வினையின் குணமும்
சூட்சுமம்! ஆனால் அவைகளின் இயக்கம், தூலக்
கண்களால் காணும், பஞ்சீகர்தம் பண்ணப்பட்ட இந்த
"உடலாகும்"! ஆகவே குணங்களால், வினை பெருகுவதும், இந்த மனமே! அவ்வினையை அனுபவிப்பதும் இந்த மனமே!



உ (9)

இங்கு தாவரமாகிய உடலும், "ஜடமே"!
வினைப் பெருக்க அனைத்து பொருள்களும் ஜடமே!
முடிவில் உடலோ, அனைத்துப் பொருள்களோ
"எல்லாம் மண்ணே"!

இங்கு ஓர் உண்மை, எப்படி புலனாகிறது என்றால்?
மண்ணிலே தோன்றி! மண்ணிலே விளையாடி! மண்ணிலேயே
மறைந்து விடுகிறது! ஆகவே இம்மனமானது, இம்மண்ணி
லேயே, அதிகாரமும், அபிமானமும், அஹங்காரமும், ஆதிக்
கமும், உரிமையும், உடைமையும், பாராட்டுவதை,
ஒரே வார்த்தையில், "சொந்தம்" கொண்டாடுவதே
காரணமாக அமைகிறது!

இங்கு சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் பாசமும்,
பாசத்தால் புண்ணிய பாவங்களும், புண்ணியபாவங்களால்
நல்வினை தீவினை யென்ற, "வினைப்" பெருக்கமும்,
~~இயல்பாக உண்~~டாகி,
அந்த வினைப் பெருக்கமானது, நம் கவனக்குறைவால்
தோன்றும், நான் என்றால் என்னுடையது என்ற, அஹங்கார
அதிகார, அபிமானம், என்னும் ஆகாமிய கர்மா என்னும்,
"வியாதியால்" உண்டாகிறது.



உ

(10)

இதில் ஓர் முக்கியம் என்னவென்றால்? வினையும் அதை இயக்கும் மனமும், சூட்சுமமாக இருந்தாலும், அவ்வினை இயக்கும் உடல், தூலமாக கண்ணுக்கு எதிராக நடந்தால் தான், பிறஜீவர்களுக்கு நம்பிக்கையும், ஓர்மயக்கமும் (வினையின் அனுபவமும்) உண்டாகி, அனைவரும் அவ்வினைக்காக சுறுசுறுப்பாக இயங்குவர். கண்ணெதிரே காணவிட்டால், பிரவர்த்தி குறைந்து, குறைந்து நிவர்த்தி மார்க்கம் ஏற்பட்டுவிடும். ஆகவே இங்கு "மாயையும் மாயாமனமும்" இணைந்து செயல்படுகிறது! இங்கு மாயை ஏற்படுவதையே "விதி" விளையாடுகிறது எனச் சொல்லலாம்!

இங்கு இதை மாயையின் விளையாட்டென்றே சொல்லலாம்!

எப்படியென்றால் மண்ணை, எழுவதும், ஆடுவதும், நாமரூபம் தாங்கி மாறுவதும், மறைபடுவதும், இல்லவே இல்லை! இங்கு ஓர் ரகசியம் என்னவென்றால்? "மனம் வினையின்படி"! கற்பனையை விரிக்கிறது. (வினை சூட்சுமம்! வினையின் இயக்கமாகிய தாபம் அனுபவ சொரூபம்.) அம்மனதின் கற்பனையின்படி, மண்ணை உருவகப்படுத்துகிறது. தன்னால் உருவாக்கப்பட்ட வினையின் தன்மையினால், எழுந்த ஸ்தூலவடிவங்களை, (பொன், பொருள், போகங்கள்) மேலேறிய "ஆறுநிலைகளில்"! அதாவது, அகங்காரம், அபிமானம், அதிகாரம், ஆதிக்கம், உடைமை, உரிமை ஆகியவைகளால்,

(11)



விளையாட்டை "உண்மையாக்கி"! (வினையாக்கி) பந்தப்படுவது, இந்த மாயா மனமே! அதாவது?????

மண் மண்ணாகவே இருக்கும் போது, அது எழுவதும், ஆடுவதும் இல்லை. அது ஜடமே!

அங்கு மனம் புகுந்த தன்மையினால், சூட்சும வினையை, (எண்ணத்தால் தேடிய வினையை) மண் ரூபமாக, உருவகப் படுத்தி, அதை அழகு கவர்ச்சி, இனிமை இவைகளைப் புகுத்தி, "மாயை மண்ணில்" விளையாடிக் கொண்டிருக்கிறது. இதை எப்படி உவமானம் கொடுப்பது என்றால்?

1. அரிப்பெடுக்கும் படை! 2. முள் செடியையே தின்னும் ஒட்டகம்! என இரண்டாகும்.

1. படை :- இடைவிடாத "நமச்சல்"! அதனால் இடைவிடாது பெறும் "எரிச்சல்"! ஆகியவை.

2. ஒட்டகம் :- முள் செடியின் "சுவை"! அதனால் வாய்புண்பட்டு, அனுபவிக்கும் "ரணவேதனை"!

இவை இரண்டுமே, இன்றைய மனம் படைத்த அறியாமையின் "மனிதனின்"! நியாயமும்! இங்கு?

எண்ணத்தை மனம் விடேன் என்கிறது!

எண்ணத்தால் தோன்றிய, நாமரூபம் கெடேன் என்கிறது!

நாமரூபத்தை தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு இவைகளை, மாயை தவிர்க்கேன் என்கிறது. (இதுவே விதி)



உ



மனம் சும்மா இருந்தால், நாமரூபம் தோன்ற வாய்ப்பில்லை நாமரூபம் தோன்றவில்லை யானால், மனதின் விளையாட்டுக்கு இடமே இல்லை மனம் விளையாடவில்லை யானால், வினைப் பெருக்கமோ, ஜனன மரணமோ, இல்லவே இல்லை! இதை ஓர் வகையில், ஸ்ரீமஹான்கள் என்ன சொல்வார்கள் என்றால்?

**"அவித்தைக்கும் மாயைக்கும் நடைபெறும்"** ஓர் போராட்டம் என்பார்கள்.

அதாவது அவித்தையென்பது, அறிவற்ற மூட ஜடசொரூபம்.

மாயையென்பது, இல்லாததை இருப்புடையதாக காட்டும் ஓர் **"மயக்க சொரூபம்"** என்பதாகும்.

இங்கு அறிவற்றது உலகமாகவும், அவற்றில் ஓர் மயக்கத்தை உண்டுபண்ணுவது மாயையாகவும். ஆகிவிட்டால், இங்கு இதை வைத்து, **"விளையாடுபவன்யார்"** எனப் பார்த்தால், அது **"மாயாமனமாகும்"!**

இங்கு மனம் இல்லையானால், மண்ணின் ஜடத்துக்கு வேலையில்லை.
இங்கு மனம் இல்லையானால், விளையாட்டின் வினைக்கு வேலையில்லை.
இங்கு மனம் இல்லையானால் மாயையின் மயக்கத்திற்கு வேலையில்லை.
இங்கு மனம் இல்லையானால், விதியென்ற இறைவனுக்கும் வேலையில்லை.

ஆகவே???



உ

(13)

மனமே ஜகம்! மனமே வினை!

மனமே மாயை! மனமே விதிக்கும் விதி!

மனமே உறவு நட்பு! மனமே சொந்தபந்தம்!

ஆக **"எல்லாம் மனமே!"**

இந்த மாயா மனதின் விளையாட்டை பார்க்கவேண்டுமானால்? இதை கவனிக்கவும்!!!

**"மண்ணிற்கு மரம் பாரமா??"** எனப் பார்த்தால், உண்மையில் இல்லவே இல்லை!!

**"கருவின் குழந்தை"** அதை 10 மாதம் சுமக்கும், **"தாய்க்கு பாரமா??"** எனப் பார்த்தால் உண்மையில் இல்லவே இல்லை!!

இதைப் போல இன்னும், பல உவமானங்கள், சொல்லலாம். இவைகளில் இந்த மாயா மனமானது, முன்பு கூறியபடி, அஹங்காரம், அபிமானம், அதிகாரம், ஆதிக்கம், உடைமை, உரிமை, என இந்த ஆறும், பாராட்டுபவதால் வரும் **"மனோபாரமாகும்!"** அந்த மனோ பாரத்தால், மனம் அழுந்தப்பட்டு, எண்ணங்கள் சிதறி, அது வலுவடைந்து, அதனைல் கர்மா பெருகி, அவ்வினைகளுக்கேற்ப தூல வடிவங்களை, **"மாயை"** என்னும், விதிநாயகன் உண்டு பண்ண, இப்படியே இருந்தால் மனம், வினை, விதி இவைகளை இல்லாமல் செய்வது, எக்காலம்???

ஜீவன் முக்தி எப்போது??? விதேக முக்தி எப்போது???



உ

(14)

இதைக் கவனிக்கவும்!

எல்லாம் மண்ணே என்றால்?

"விகாரம் அடைவது"

"விகாரப்படுவது?" எனப் பார்த்தால்,

மண் பானைகளை, ஒன்றின் மேல் ஒன்றாக, அடுக்கி வைத்த நிலையில், எதுவும் எதையும் தாங்கவும் இல்லை எதுவும் எதற்கும், பாரமாக அமைவதும் இல்லை! இங்கு ஜீவர்கள், இதைக் காணும் போது, "என்னுடையது" என, சொந்தம் கொண்டாடி, உடைமையும், உரிமையும் பாராட்டும் போது தான், "காட்சியில்" விகாரமும், வாக்கால் வழக்காடும் நிலையில், விவகாரப் பிரச்சினையும், உருவாகி விடுகிறது. இங்கு அந்த மண் பாண்டங்கள், நாங்கள் இத்தகையது என்றோ, எங்களுக்கு இந்த நாமரூபம் உண்டென்றோ, நாங்கள் இன்னாருக்கு உரியவர்கள் என்றோ சொல்வதும் இல்லை! அவை வாதாடுவதும் இல்லை! நிதானமாக பொறுமையாக, இறை குரு உணர்வோடு, "அடங்கிய" நிலையில், அவைகளை நோக்கினால்?

உ

(15)



அப்பாண்டங்கள், "வினை" சம்பந்தம் எவர்க்குண்டோ, அங்கே அது சாரும். இங்கு விட்டுக்கொடுக்கும், சாதனையே மனதின் பயிற்சியாகும்.

இங்கு!!!

வினையாகிய தாவம், அவ்வினைப்பாண்டங்களை ஏற்கும். மனம் சாந்தி சமாதானத்துடன், விட்டுக்கொடுக்கும். விதியென்ற இறைவன், தம் மாயையை விடுத்து, வினையை "அந்த ஜீவனுக்கு" அனுகூலமாக்கி, விடுவான். அங்கு நம் சாதனையெல்லாம், இறை குரு உணர்வோடு, "பொறுமை"! "அன்பு"! "கருணை"! நற்தவன சக்தியில், "நம்பிக்கை"! இவைகளால் பெறும் "ஆனந்தம்" ஒன்றே!

இங்கு விகாரமும் விவகாரமும், எப்படி ஏற்படுகிறது என்றால்? காணும் காட்சியிலும், கேட்கும் ஒலியிலும், தான் உண்டாகிறது. கண், காது, மூக்கு, வாய், இவையெல்லாம் மனம், வெளியில் செல்லும், வாசல்களாகும். இவைகளின் வழியாக இந்த மனம் வெளியில் சென்று,



"விளையாட்டு" நடைபெறும், விஷயங்களை, "விதி" யென்ற கால தேவன், நடத்தும் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும், ஓசைகளையும் விபரீத, விசித்திர, விகார, விரகதாப (காம) குண தோஷங்களாகவே கற்பனை பண்ணி, "மனம்" என்றுமே, அதன் தன்மை, "கற்பனையும், குற்றம் குறை" உணர்வு இணைந்ததாகும். வினையை தேடும் நியாகும்.

இதைவிட இம் மனதிற்கு, என்ன பாபம் என்றால்?

உப்பு, உறைப்பு, புளிப்பு என்னும் "காரசாரமும்", இனிப்பு என்ற காமக் களியாட்டமும், இந்த விளையாட்டே ஜன்ம ஜன்மாந்திரமாக, பற்பல சட்டைகளை (தேகங்களை) போட்டு விளையாடி வரும், ஜகவாச தோஷ பழக்க வழக்கங்களை, விடமுடியாத தன்மையினால், அதுவே சகஜமாகி விட்டது. ஆகவே இங்கு "மனம்" எண்ண, "வினை" பெருக, "விதி" நடத்த, ஆக இது ஒரு "ஜனனமரண தொடர் கதையாகி விட்டது".

இவை அறிந்து, ஜீவன் முக்தி, பெற வேண்டாமோ?

(17)

உ



முன்பு பலகாலம், திரும்ப திரும்ப, சொல்லி வரும், சாதனையில் மனம் நிலைத்து நின்று, பின்பு அச்சாதனைகள், அனைத்தையும் விட்டு

# "சொல் அற சும்மா! "இருப்பதுவே சுகமாகும்!

இதற்கு "ஒரே வழி"

1. நான், என்னால், என்னுடையதை விடு!
2. எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையதே! எல்லாம் உன்னால்! என ஆக்கு!
3. அஹங்காரம், அபிமானம், அதிகாரம், ஆதிக்கம், உடைமை உரிமை, ஆக இந்த ஆறும் வேண்டாம்!
4. குற்றம் குறை, பேதம், விருப்பு வெறுப்பு, வேண்டாம்!
5. எதையும் ஸ்ரீ பகவான் கருணையாக ஏற்கப் பழகு!
6. ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்பு, ஆவேசம், வேண்டாம்!
7. பொறுமை, அன்பு, கருணை, நிதானம் (இவற்றுடன்) குற்றங்களை மற! மன்னி! விட்டுக் கொடுத்து நீ விலகு!
8. எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாது! என உறுதிபண்ணு!
9. இறை குரு உணர்வில், தைலதாரை போல் இரு! உடல் உலக நாம ரூப உணர்ச்சிகளை கெடு!
10. நம்பிக்கையும், வைராக்கியமும், **பாராயண சிரத்தையுமே!** ஜீவன் முக்தி!

மேலே கண்ட பத்தும், ஒரு சாதகனுக்கு வேண்டும்! அவஸ்யம்





ஓம் உ

# "பரமும் ஸ்ரீபகவானும்"!

"பரம்" என்றாலே, நாம, ரூப, குணம், குறி, கால, தேச, வர்த்தமானம் கடந்த, வாக்கு மனம் கடந்த, வரிவடிவிற்கும், ஒலிவடிவிற்கும் எட்டாததான, இன்னதென சொல்லவொண்ணா, விளக்கவொண்ணாததான, "அகண்ட பேரொளி"! ஆகும். அதை பரசொரூபம் என்று ஸ்ரீமஹான்கள் அழைக்கிறார்கள்.

"ஸ்ரீபகவான்" என்றால், "ஆதி" என்றும், அதன் "மீதி" (அதன் பிற்பகுதி) என்றும், இரண்டாக ஸ்ரீமஹான்கள் பிரித்தார்கள்!

"ஆதி" என்றால், அதை இரண்டாக பிரித்தார்கள். "சதாசிவம்" என்றும் "மஹேசன்!" என்றும், இது முதல் பகுதி என்றும். பிற்பகுதியாக, பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆதிசக்தி (யோகமாயா) விநாயகன், முருகன், என ஆறாக வகுத்ததில், மூர்த்திகளில் ஐவரையும், ஏற்றுக் கொண்டு, ஆதிசக்தி யென்ற யோகமாயாவை, "உபகரணமாகவும்"! ஆக்கிக் கொண்டார்கள்.



உ

உபகரணம் என்றும், அந்த ஐவருக்கும், "இயக்க ஆக்கத்திற்கு!" ஆதாரமாக இருக்கும், ஓர் மஹத்தான சக்தியாகும்.

அன்றைய ஸ்ரீ மஹான்கள் சொன்ன வாக்கியமாவது:—
கிருதா, திரேதா, துவாபர ஆகிய மூன்று யுகங்களிலும், மேலே கூறிய பஞ்ச கர்த்தாக்களே, பிரபல்யமாகவும், "பிரத்தியக்ஷமாகவும்!" "அநுபவ, அநுகூலங்களாகவும்!" விளங்குவார்கள் என்றும், "கலி" யுகத்தில் மட்டும், மேலே கூறிய பஞ்ச கர்த்தாக்களையும், மறைத்த நிலையில் "யோகமாயா" பிரத்தியக்ஷமாகவும் பிரபல்யமாகவும் அநுபவ அநுகூலமாகவும், பிரகாசித்தே தீர வேண்டுமென்றும், சொல்லி வைத்தார்கள் ஸ்ரீ மஹான்கள். இந்த கலியுகத்தில் மட்டும், அந்த யோகமாயாவானது, "பரிவார காவல்" தெய்வங்களாக, (ஆண் பெண் என்ற நிலையில்) இருந்து, பிரத்தியக்ஷமாகவும், பிரபல்யமாகவும், அநுபவ அநுகூலமாக பிரகாசிக்கும் என, ஸ்ரீ மஹான்களின் வாக்கு!



ஆனால்? "யோகமாயா" வானது, முன்பு கூறிய சதாசிவம்! மகேசன்!! ஆகிய இருவருக்கும், மற்றும், அகண்ட பாவனையில்! (சர்வ சாட்சித் தன்மையில்) உள்ள, ஆத்ம ஞானிகளுக்கும்!" அடங்கிய நிலையில், நிலை கண்டு, அனுகூலமாக இருக்கும் என்றும்; ஸ்ரீமஹான்களின் வாக்கும், அனுபவமும் இருக்கிறது.

இதில்!! "லோகமாயா!" உபாதையோடு கூடியது!

"யோகமாயா!" உபாதை இல்லாததாகும்!!

லோகமாயா என்றால் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற, "தோற்றம்", "இருப்பு", "மாற்றமும்" "மறைவும்" இணைந்த முத்தொழிலுக்குகந்ததாகும்!

யோகமாயா என்றால், மேலே கூறிய தொழிலுக்குப் பயன்படாமல், "நாம் அது" என்ற ஒரே இருப்புத் தன்மையோடு கூடி, ஆனந்தம் ஒன்றே நிறைந்ததாகும்.



இது **"அகண்டபாவமே"**! என்றும், சர்வ சாட்சித் தன்மைக்கு, **"ஆதாரவாக"** இருக்கும்!

பரம் இயக்கம் அற்ற தன்மையினாலும்; சதாசிவமும், மகேசனும் முறையாக அருள்தலும், மறைத்தலும், மற்றுமே செயல்படும் தன்மையாலும். இந்த யோகமாயாவின் **"உபயோகத்தில்"** தான்! செயல்படமுடிகிறது. இவ்விருவரும் செயல்படும் விதம் கீழே!

**"மறைத்தல்:**— சாதனை செய்து வரும், ஓர் பக்குவ ஆன்மா, நாமரூப குண ஜகத்தை, ஈசனின் யோகமாயாவின் மயக்கமென உணர்ந்து தள்ளி விட்டாலும்; **"நாம் அதுவாக"** இருக்கிறோம் என்ற, தற்போதத்துடன் கூடி இருப்பதால்; இங்கும் நாம் என்றும், அது வென்றும், **"பேதம்"** தோற்றுவதால் இந்த பேதபாவனையே ஓர் மறைத்தலாகும்!

**"அருள்தல்:**— இது சதாசிவ நிலையாக இருப்பதால் இதற்கு சிவம், ஸத்குருவே ஆகும். இங்கு இதை உணர்ந்த ஸ்ரீ மஹான்கள், இந்த சதாசிவமும், ஸத்குருவும்,



"ஒன்றே" எனச் சொல்கிறார்கள்.

சதாசிவம் என்றாலே, சர்வசதாவும், எந்த வினாடியும், "அதுவாகவே" இருக்கும் நிலையாகும்! இந்த சதாசிவம் என்ற ஸத்குருவானவர், நாமரூப உலக குணதோஷ "கலக்க பயம்" விட்ட நிலையிலும், தெய்வ "மயக்கபோதையை" விட்ட நிலையிலும், அதுவே நாம், என்ற பேத உணர்வையும் நீக்கும் நிலையிலும், (நாமரூபகுண; "உணர்ச்சியை"யும், தேவ தெய்வ ரூபலாவண்யமும், மகிமைப் பிரவாகமும் அடைந்த, தெய்வ "உணர்வையும்", அதுவே நாம், நாமே அது என்ற, இரண்டுபட்ட "பேத திருஷ்டியையும்", முழுமையாக நீக்கியதால், இது அருள்கல் எனப்படுகிறது!

இதுவரை பரத்தின் தன்மையையும், அது இயங்குவதற்காக, மனோசக்தியும், சதாசிவத்தையும், யோகமாயாவையும் எப்படிப் பயன்படுத்துகிறது, எனப் பார்த்தோம். இனி "ஸ்ரீபகவானின்" நிலையை உணர்வோம்.



உ

# "ஸ்ரீபகவான்"!!!

மஹேசன், சதாசிவம் இவ்விருவரும், தேவ தெய்வ ஸ்ரீ பகவான் நிலைக்கு ஒத்து வரமுடியாத ஒன்றாகும். "மஹேமய" கற்பனைக்கு எட்டாத அதீதநிலையாகும். இவை இரண்டும், நாமரூப "பொருள்" அல்ல! "சுவை"! சொரூபமானதாகும். அதை மனம் புத்தி, சித்தத்தால், அறியமுடியாததாகும். கூர்க்கத் தெளிந்துணரும், "அறிவு"! சொரூபமாகும்! ஓர் பழத்தின் சுவையை, எப்படி கண்ணால் காண முடியாதோ, அதை சுவைப்பவரே, அதை எப்படி உணர முடியுமோ?, அப்படி அவ்விருவரையும் (இவ்விருவரும் ஸ்ரீ பகவான் அல்ல) ஆனால்??? உணர முடியும்!

"பிரம்மா"! "விஷ்ணு"! "சிவன்"! ஆகிய இம் மூவரையும், "நாமரூப,குண,"! ஐக சொரூபத்தை, "மஹிமை"! (எண்ணத்தால்), முழுமையாக விட்டவர்களுக்கே, இதுசாத்தியமாகும். அறிவால் இவர்களை உணர்ந்து, அறிவால் தரிசிக்கமுடியும்.



உ



இம் மூவரையும், தத்வார்த்தமாக விளக்குவது என்றால், வரிசைக்கிரமமாக, "மண்" / "ஜலம்" / "அக்கினி" என்றும் சொல்லலாம். இவர்கள் மூவரும், "அறிவின்" / வடிவமே!

அறிவும், மனம், புத்தி, சித்தத்தின் மூலமாக, உடல் உலக நாம ரூப குணங்களை, முழுமையாக விட்டவர்களுக்கே, இம் மூவருக்கும் "வடிவம்" / கொடுக்க முடியும்.

மண் என்றால் சிருஷ்டி யென்றும், ஜலம் என்றால், ஜீவரட்சிப்பு என்றும், அக்கினி யென்றால், மாற்றம், மறைவு, என்றும், பொருள் கொள்ளலாம்!

இம் மூவரும், தெய்வங்கள் என்ற "ஸ்ரீபகவத்" சொரூபங்களாகும். ஸ்ரீபகவான் ஆகும் இம் மூவரும், ஸ்ரீபகவான் என்றால், தொழில் கர்த்தாக்களாகும்!

இம்மூவருமே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார கர்த்தாக்களாகும்!

அடுத்து யோகமாயா என்றும், மூலப் பிரகிருதி என்றும், "நாதப்பிரம்மம்" / என்றும், "ஓம்" என்ற பிரணவ சொரூபமென்றும். வாக்கால் விளக்கம் தந்தும்.



அறிவால் வடிவம் தந்தும், "எளிய"
"இனிய" அதி அற்புத சொரூபமான,
"விநாயகரும்"!
சிவாக்கினியில் தோன்றிய விளக்கு ஓர்
வகையில், "ஞானக்கனி" (ஞானப்பழம்)
என ஆன, "முருகனும்"! இரு தெய்வ சொரூப,
ஸ்ரீபகவத் சொரூபமான, "ஸ்ரீபகவான்"! ஆகும்.
இதில் விநாயகன், "பிரணவ" சொரூபி
ஆகவும், பிரம்ம அம்ஸஸ்வரூபியாகவும்,!
முருகன் "ஞான" அம்ஸஸ்வரூபியாகவும்;
தன்னை அறிந்த, "ஸ்ரீமஹான்கள்"!
சொல்லுவார்கள். பஞ்சகர்த்தாக்கள்!
இந்த ஐவருமே, ஆதி தெய்வங்கள், ↑ மூல தெய்வங்கள்!
சொல்லுவார்கள்
என்றும்; லோகமாயா என்பது, அந்த ஐவருக்கும்,
"சக்தி" சொரூபங்களாக, விளங்குகிற தென்றும்;
அதாவது???



சேவைக்காக

இந்த இவருக்குமே, சக்தியென்ற நிலையில்,
"பெண்" வடிவங்களாக கொடுத்
தார்களே யன்றி, "மனைவி" என்ற

போகவஸ்துக்களாக கொடுக்கவே இல்லை யென்பதே.

"பிரமாண உண்மையாகும்"

ஆனால் கலி தோஷ மஹிமை, மனைவி என அப்படி ஆக்கிவிட்டது.

இந்த இவருமே, "தியான், யோக"
புருஷர்களாகும்! இவ்விவருமே, எந்த விநாடியும்,
"ஹரிதுயிலோர்" தூங்காமல் தூங்கும்
நிலையில் கூடியவர்களாகும்! ஆனால் யோகமாயா,
சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், ஆகிய முத்தொழில்களையும், அனா
யசமாக செய்து கொண்டு, தன் இயக்கத்தை மறைத்துக்
கொண்டு, இவ்விவரின் மேல், பழியை போட்டு விடுகிறது.

இவ்விவரும், சாந்த சொருபியாயும் ஸத்திய சொரூ
பியாயும் விளங்குவதால், மௌனம் கலக நாஸ்தி என்ற
நிலையில், எந்த விநாடியும் ஆனந்த பரர்களாகவே,
இருக்கிறார்கள். காரணம், இவர்களிடம் மனம் இல்லை!
யோகமாயாவை கண்டுகொள்வதும், கண்டிப்பதும், இல்லை!





அந்த யோக மாயாவும், இவர்களுக்குள்
அடங்கி இருக்கிறது. எப்படியென்றால்?

ஓர் அரசன் வந்து, அரியாசனத்தில்
அமர்ந்த நிலையில், அவ்வரசன் ஆணை
யிடாமலே, அனைத்து காரியங்களுமே,
இயல்பாகவே, அனைவரும் பார்த்து முடிப்பது போல்,
இவ்வைவரின் சந்நிதியில், யோக மாயா, அனைத்து
காரியங்களையும், தாமே செய்து முடிக்கிறது.

அங்கு அரச அவையில், அரசன் செய்யாமல்,
அனைத்தையும் அவையோர், செய்து முடித்தாலும், அதன்
முழுப் பொறுப்பும், அரசனையே சாரும்! அதேபோல்,
இங்கு யோக மாயா தன் சக்தியால் ஸ்வாமிக்குரியவைகளை அனைத்தையும் முழு
மையாக செய்தாலும், அனைத்து காரிய பொறுப்புகளும்
இந்த ஐவரையே சாரும்! ஆகவே இங்கு இந்த ஐவருமே,
ஸ்ரீபகவத் ஸ்வரூபமான, "ஸ்ரீபகவான்"
என்ற நிலையைப் பெறுகிறார்கள். ஆனால் யோகமாயா,
"ஸ்ரீமாதா" என்ற "ஸ்ரீ அன்னை" ஸ்தான
த்தைப் பெற்றுக் கொள்வது, பெருமைக்குரியதே என,
ஸ்ரீஞானிகள் சொல்லுவார்கள்.





உ

மேலும் ஸ்ரீ பகவான் என்ற, ஸ்ரீ பகவத் சொரூபத்தை, இருவர் ஏற்கின்றனர். அவர்கள் ஸ்ரீ ராமனும், ஸ்ரீ கண்ணனுமாகும்!

இங்கு இவ்விருவரும், "அவதார" சொரூபங்களாகும்!

ஸ்ரீ விநாயகனும், ஸ்ரீ முருகனும், அவதார சொரூபங்கள் என்றே, சொல்லவேண்டும். ஆனாலும் ஸ்ரீ விநாயகனுக்கும், ஸ்ரீ முருகனுக்கும், "தோற்றம்" உண்டு!!! "இருப்பு" உண்டு!!! ஆனால் "மறைவு" இல்லை!!!

இவ்விரு தோற்றமும், ஒன்று ஸ்ரீ அன்னையிடமும், ஒன்று ஸ்ரீ தந்தையிடமும், உண்டானதாக "கதை" உண்டு!

இவ்விரண்டுமே, "அயோனி" சம்பந்தமே! கருவறையிலிருந்து வரவில்லை. ஆனால்???

இவ்விருவரும், காரணார்த்தமாக "தம்மைத் தாமே, தோற்றுவித்துக் கொண்டனர். செய்யும் காரணத்தை, காரிய சொரூபமாக இருந்து, செயல் படுத்தி விட்டு, வந்ததற்கோ, இருந்ததற்கோ, மறைந்ததற்கோ, "ஏது தடயமும்!"



(௨௯)

இல்லாமல் தம்மைத் தாமே,
"மறைத்துக்" கொண்டார்கள்.
அதாவது?
"அந்தர்தியானமானார்கள்!!!"

(இவர்களுக்கு
சமாதி ஆலயம் இல்லை. ஆனால்
ஆலயங்கள் கோடானுகோடி உண்டு)

ஸ்ரீவேத வியாசர் அம்சமான, ஸ்ரீ ஜெய தேவ் ஸ்வாமிகள் எழுதிய, ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு, பத்து அவதாரங்கள், எடுப்பதாக சொன்னார். அவைகள் "எட்டின்" ஆர்த்தியானது அந்த எட்டில், "ஆறு" தோற்றங்கள், காரணமாக வந்தன. வந்த காரணத்தை, காரிய சொரூபங்களாக, இருந்து முடித்தன. இவ்வறுவரும், அவ்விருவரைப் போலவே, அந்தர்தியானமானார்கள்.

இவ்வறுவருக்கும், சமாதி ஆலயமும் இல்லை!
வேறு மூர்த்த ஆலயங்களும் இல்லை!!

ஆனால்??? மேலும் இருவரான,
ஸ்ரீராமனுக்கும், ஸ்ரீ கண்ணனுக்கும் "தோற்றம்" உண்டு
"இருப்பு" (வளர்தல் விளையாட்டு) உண்டு!





நூல “மறைவுண்டு”!

சமாதி ஆலயமும் உண்டு. கோயில்களும் கோடானு கோடி உண்டு! மேலும். இவ்விருவரும், வாழ்ந்த கதைகள் புராணம் (புளுகு) என இல்லாமல், “இதிகாசம்” (இப்படி இது நடந்தன) என ஆயினும்! ஸத்தியவாக்கை ஸத்தியம் பேசி, தர்மம் செய்து, தியாக புருஷனை, நாம் ஸ்ரீராமனைப் போல், வாழ்ந்தால் ??? ஸ்ரீ கண்ணனைப் போல் நாம் “ஞானி”! ஆகவாம் என்ற, ஆழ்ந்த அனுபவத்தை தருகிறார்கள்.

“ஸ்ரீராமனும்” “ஸ்ரீகண்ணனும்”!

ஸ்ரீ விநயகனும் ஸ்ரீ முருகனும் “அவதார” சொருபமாகவும் ஸ்ரீ ராமன் “பூரண” சொருபமாகவும், ஸ்ரீ கண்ணனை “பரிபூரண” சொருபமாகவும், தன்னை உணர்ந்த ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள். (காரணம் அவர்கள் வாழ்வின் அனுபவம். அப்படி.)

(31)



"மஹேசனும்", "சதா சிவமும்" பிரம்ம சொரூபமாகும்.

"பிரம்மா", "விஷ்ணு", "சிவன்" ஆகிய மூவரும், ஸ்ரீ பகவானாக இருந்தாலும், வரம் தரும் "வரப்பிரசாதிகளாவர்"!!!

ஸ்ரீ விநாயகனும், ஸ்ரீ முருகனும், ஸ்ரீபகவானாக இருந்தாலும், "போகங்கள்" கொடுக்காமல், குரு நிலையறிந்து "ஞானம்" அருள்பவர்களாக இருக்கிறார்கள்.

ஸ்ரீராமனும், ஸ்ரீ கண்ணனும், "நம்முடனே" "வாழ்ந்து காட்டிய" ஸ்ரீ பகவத் சொரூபங்களான, ஸ்ரீ பகவான்கள் ஆகும்! இதில் ஸ்ரீராமனை (உபாசித்தால்) "பக்தி" பண்ணினால், சத்திய தர்மத்துடன் இணைந்த வாழ்வு மோட்சமும் சித்திக்கும் அமையும்.

ஸ்ரீ கண்ணனை (உபாசித்தால்) "பக்தி" பண்ணினால், போகங்கள் ருசிக்கும்! ஞானம் செழிக்கும்!





உ

எனஸ்ரீமஹான்களின், அனுபவ
வாசகம் இருக்கிறது! இதன் முடிவு
எப்படி என்றால்? "ஸ்ரீபகவான்"
என்ற நிலைக்கு, வரிசைக் கிரமமாக சொல்வது
என்றால்? பிரம்மா, விஷ்ணு, சிவன், விநாயகன்
முருகன், (யோகமாயா அம்ஸ) ஸ்ரீ அம்பாள்,
ஸ்ரீ ராமன், ஸ்ரீ கண்ணன்! ஆகிய "எல்லவர்"
ஆகும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்.
மூர்த்திபேதமும், மத, தெய்வ பேதமும்,
இக்கலியுகத்திற்காகவே வந்தனாகும்!
அதன்பிறகே, "சைவம்" என்றும்,
"வைஷ்ணவம்" என்றும், மத
பேதவெறியும்! பரிவார தேவதை
கள் என்ற நிலையில், கிராம காவல் தெய்வங்களும்
விரிவடைந்து, அழிவுபாதையை
நோக்கி, அதி வேகமாக போய்க் கொண்டிருக்கிறது.



(௩௩)

"ஸ்ரீபகவான்" என்ற தேவதெய்வங்கள் (சிவனே, விநாயகனே, முருகனே, அம்பாளோ, கண்ணனே) நம்முடைய கற்பனை சொரூபங்களாக இருந்தாலும், "அவ்வடிவம்" கொடுக்கும் மனம், "தாய்மை" ஆக இருந்தால்தான், அவ்வடிவம் நாம் கொடுக்க முடியும். அந்நிலையில் பேசலாம். விளையாடலாம். நேரில் உரையாற்றலாம். உறவாடலாம்.

"அதுவும்" (ஸ்ரீபகவானும்) ஓர் விபரம் அறியாக் குழந்தையே!!! நாமும் அக்குழந்தை நிலை பெறவேண்டும்.

10 மாதம் அல்லது ஒரு வயது குழந்தைக்கு — அக்குழந்தைக்கு அம்மா மட்டும் தெரியும். ஆனால் அப்பாவை தெரியாது. அதுபோல் ???

நம் உபாசனாமூர்த்தியாகிய, ஸ்ரீபகவான் மட்டும் தெரியும்! உடல், உலக, நாம, ரூப, குண, ஜகம் தெரியாது! அப்படி, அந்த விபரம் தெரியாத குழந்தையானது (நானும்) பசிக்காக அழுதால் தெரியுமே தவிர, வேறு ஒன்றும் தெரியாது. அறியாது.





நாம ரூப குண, சம்பந்த "துர்க்குணத்தை" விட்டாலன்றி, ஸ்ரீ பகவத் சொரூப "ஸத்வகுணமாகிய" ஏக குணத்தை, பெறமுடியாது.

துர்க்குணம் பிரவர்த்தியாகும்! ஸத்வகுணம் (துர்க்குண) நிவர்த்தியாகும். ஸத்வகுணம் பிரசித்தமாகி விட்டால், "நிர்க்குணம்" இயல்பாகி விடும்!

ஸத்வகுணம், பெறுவதுவே நம் சாதனையாகும்! பின் அனைத்து சாதனைகளையும், விட்டாலன்றி, நிர்க்குணம் ஆகமுடியாது. ஸத்வகுணம் சாட்சி நிலையாகும்! நிர்க்குணம் அகண்டபாவனையாகிய, சர்வசாட்சியாகும். சர்வசாட்சியில், அது நிர்க்குணமானாலும், அங்கு "குணமற்ற" ஸ்வயமான "அறிவு" அவஸ்யம் உண்டு. இங்கு எந்த ஆசையும் அசையும் இராது. "அதுவே நான்" என்ற வேறறிவோடு கூடிய உணர்வு ஒன்றே உண்டு.



35

இங்கு "ஞானிக்கு"
(பரோபகார நிமித்தமாக)
முன்னால் மறைந்த, ஜீவன் முக்தர்களுடைய
"அநுபவ கருத்துக்கள்"!
சங்கேத பாஷை என்னும், உணர்வு வடிவங்களே,
"பரஞானமாய்" (அது செயலற்ற தன்மையிலே)
"இறைநிலையில்"! நாம் இருந்து கொண்டு,
அதை கொண்டுவர முடியும். "(காணவும் முடியாது)"
ஆனால் ↑ இதை "மனதால் நம்பவும் முடியாது"!
ஆனால்???
இதை "கூர்ந்த அறிவால்" உணரலாம்!
இது வேத, சாஸ்திர, புராண, இதிகாச, மந்திர, தந்திர
எந்திரங்களால் அறியவும் முடியாது! உணரவும் முடியாது!
"தான்" இறந்து, "தாம் தாமான வர்களுக்கே"! முடியும். இது பிரம்ம ரகசியம்!



உ

மேலும் இறைநிலையென்ற, "சாட்சி"
நிலை பெறுவதும் கூட, ஜீவன்முக்தி
அடைந்தவர்களுடன், உறவாடவோ,
உரையாடவோ, சங்கேதபாஷையை,
உணர்வால் உணரவோ, முடியாது தான். } ஜீவன் முக்தி தெய்வ நிலையிலும் அந்தமாதிரிதான்
காரணம் இங்கு "யோகமாயாவே"!
பிரசித்தமாகிறது. யோகமாயாவினால், "புதிய
சிருஷ்டியோ"/ "விதிக்கு
உட்பட்ட"/ நிகழ்ச்சியோ தான், சாதிக்க
முடியும்! விதிக்கும் அப்பாற்பட்டதை, சிருஷ்டிக்
கவோ, சாதிக்கவோ முடியவே முடியாது!

"ஜீவன்முக்தநிலை"யானது,
"விதிக்கும், யோகமாயாவென்ற இறைநிலைக்
கும், அப்பாற்பட்டதாகும். ஆனால் யோகமாயா,
புதிய சிருஷ்டியும் செய்யாது! வினை விதிக்குட்பட்டதை
மறைந்ததை, கொண்டு வரவும் செய்யாது. புதிதாக
வினைவிதி சம்பந்த சிருஷ்டி செய்யவும் செய்யாது!



௩௭

உ

ஆசை, வினை, மனம், விதி ஒழிந்து ஜீவன் முக்தி பெற்றவர்களை, திரும்ப கொண்டு வரவும் முடியாது. அவர்கள் "அகண்டப் பேரொளியில்" (பிரம்மானந்த சமுத்திரத்தில்) கலந்து விட்டாலும், அவர்கள் "ஸத்தியவாக்கை" (இந்த விருடியும் ஸத்தியமாக இருப்பதால்) பரோபகார நிமித்தமாக, இவ்வுலகிற்கு கொண்டு வரும் நிமித்தமாக, "பரநிலையைப்" பெற்றவர்களின் மூலமாக, வெளியில் கொண்டு வர, இந்த யோகமாயா, ஓர் உபகார கர்த்தாவாக அமையும்.

இங்கும் ஓர் உண்மையை உணரலாம்!

மற்றைய மூன்று யுகங்களிலும், (கிருதா, திரேதா, துவாபர) தவத்தோடு வாழ்ந்த, ஸ்ரீ மஹான்களின் "தவம்" தான் மறைந்து விட்டதேயன்றி, அவர்கள் "வாக்கு" ஒலி அலைகளாக, இந்த விருடியும், எங்கும் நிறைந்திருப்பது, பிரமாண உண்மையாகும்.



உ

சங்கேத பாஷையாக, நிறைந்திருக்கும் அவ்வாக்கைத் (ஒலி அலைகளை) இன்றும் தன்னை அழிந்து "தாம் ஆன" ஞானிகளே, அதை உரை முடியும். ஏனையோரால் முடியாது. இப்படிப்பட்ட ஞானிகளுக்கு, "யோகமாயையையும்" அதுசம்பந்த ஸ்ரீ பகவானையும், "தமக்குள்ளே" கொண்டு வந்த தன்மையினால், (சர்வ சாட்சித் தன்மையாகிய, அகண்ட பாவனையில், "தாம் ஆன" தன்மையினால்) உபாதை இல்லாத "யோகமாயா", இவர்களுக்கு, உபகாரமாக இருந்து கொண்டு, எந்த வாக்கை, (எந்த ஒலி அலைகளை) இவர்கள் "அநுபவ பாடமாக", ஏற்கிறார்களோ; அவர்களின் "தூல வடிவங்களையும்", காட்டி மறைக்கலாம். இதை யோகமாயா விளைவு, செய்ய முடியும் என, ஸ்ரீஞானிகளின் அநுபவம் இருக்கிறது.



உ



இதை ஞானிகள், எப்படி சொல்கிறார்கள் என்றால்? ஜீவன் முக்தர்கள், பிரம்மானந்த சமுத்திரத்தில், உப்பு பதுமையென, கரைந்து கலந்துவிட்டனராம்???

"ஆத்மஞான அனுபவஞானியின் பரோபகார" நிமித்தமாக, எங்களுடைய யோகமாயாவின், உபகாரத்தால், அப்பிரம்மானந்த சமுத்திரத்தில், ஓர் குடம் ஜலம் எடுத்து, வைத்துக்கொண்டு, ஜீவன் முக்தி அடைந்த, எந்த "ஞானி" வேண்டுமோ, அவருடைய "நாமாவை" அக்குடத்திற்கு இட்டு அதை வைத்து, எதை கிரஹிக்க வேண்டுமோ, அதை கிரஹித்துக்கொண்டு; (பரஒளி அவர்கள் வாக்காகவும் தற்காலிக குடத்தோற்றம், அவர்கள் ஜீவனை உருவம், என யோகமாயாவினால், ஆக்கிக் கொண்டு) அதை எடுத்த காரியம் முடிந்தவுடன், சமுத்திர ஜலத்தை, சமுத்திரத்திலேயே கொட்டிவிட்டு, அக்குடத்தையும், காலி செய்து விடுவோம், என ஸ்ரீ மஹான்களின் வாக்காகும்.



இது "யோகமாயாவின்" சகாயம் இல்லாமல் இது நடைபெற முடியவே முடியாது. இங்கு இறை நிலை என்ற, "யோகமாயா" இல்லவே இல்லை. அது இவனுள் மறைந்து, கலந்து மயமாக விட்டதென, உணர வேண்டும்!

யோகமாயா இல்லாத இடத்தே தான் யோகமாயா இருக்க முடியும் "யோகமாயாவினுள்" யோகமாயா அடங்கும். யோகமாயாவினுள் யோகமாயா இல்லை!

இங்கு "பர நிலையை" சாரும் பக்குவ ஆன்மா, "வினை, மனம்" இவைகளை ஸ்ரீபகவானாகிய, "விதி" தேவனிடம், (யோகமாயாவிடம்) பரிபூரணமாக விட்டு, அழித்து விட்ட தன்மையிலும் சாட்சி சொரூபமான ஸ்ரீபகவானே தாமாகி, தாமே ஸ்ரீபகவானாகி; "தெய்வமயக்கத்தையும்" அதன் "பயத்தையும்" விட்ட நிலையில், சர்வசாட்சித் தன்மை பெற்று விடுவதால், "யோகமாயா" இவனுக்கு



(41)

உ

இயல்பாகவே, அனுபவமாகி விடு
கிறபடியாலும், அறிவு சொரூபமான,
"ஆன்மா", ~~யாலும்~~ நாமான தன்மை
ஜீவன் முக்தி அடைந்த, ஸ்ரீமஹான்
களுக்கும், "தாமே ஆன்மாவான்"
படியினாலும், தம்முடைய யோகமாயாவின், பவத்
திறவ், "அவர்கள்" (ஜீவன் முக்தி அடை
ந்த ஆன்மாக்களை) "ஆன்மபரோபகார"
நிமித்தமாக, முன்பு சொல்லிய நிலையில், ஆக்கிக்
கொண்டு, "தாமும்" சூட்சுமமாய் "அவர்
களும்" சூட்சுமமாய் அமைந்த நிலையில், ஓர் உரையாடல் நிலையில்
நாடகம் நடத்தமுடியும்! இங்கு அமையும் பரஞானிக்கு சூட்சும
வடிவம், "ஆகாயம் உடலாக
வும்; "வாயு இயக்கமாக
வும்!" இருக்குமென, ஸ்ரீமஹான்களின் அனுபவம்
இருக்கிறது. இங்கு "பரஒலியே" வாக்காக
அமைகிறது. ஒன்றை ஒன்று ஸ்பரிசிப்பது என்பதையும்
வரிவடிவிலோ, ஒலி (வாக்கு) வடிவிலோ, எவராலும்
விளக்கம் தர இயலாது! இதை??? (சிரமத்துக்கு மன்னிக்கவும்.)



# "அவர்கள் நிலையில்"

நான் உணரவோ, பார்க்கவோ முடியும்! இதை சர்வசாட்சி நிலை என்ற, அகண்ட பாவனை பெற்றவர்களுக்கே, சாத்தியமாகும்! இது "ஜீவநிலைக்கும்", "தேவ தெய்வநிலைக்குமே" எட்டாத ஒன்றாகும். காரணம் இங்கு போகமாயா பயன் தராது! இது யோகமாயாவின் அனுபவமாகும்! இங்கு "அஷ்டசித்திகளும்" பயன் படாது. என நீ அநுபவ ஞானிகள் சொல்வார்கள். அஷ்ட சித்திகளின் வல்லமை, போகமாயாவையே, சாருமேயல்லாது, யோகமாயாவை சாராது என்பதே ஸ்ரீமஹான்களின் அனுபவவாக்கு! அஷ்டசித்திகளும் உபாதையோடு கூடியதாகும். யோகமாயா உபாதை இல்லாததாகும். தேவ தெய்வங்கள், போக காரியகாரண சம்பந்தப்பட்டிருப்பதால், அவர்கள் போகமாயாவையே, பயன் படுத்த முடியும். ஞானிகள் போக காரியகாரணத் தேவையற்றிருப்பதால், போகமாயா தேவையில்லை.

உ



# 3 4 சரீரங்கள்



ஓர் உண்மை யென்ன வென்றால்?
ரிபு கீதையில், ஓர் பாடலில்,
தூலசரீரம், சூட்சும சரீரத்திலில்லை,
தூலம், சூட்சுமம், இவ்விரண்டும், காரண
சரீரத்தில் இல்லை யென்றும், அதனினும்
அதீதமானது, "மகாகாரண" சரீரம்,
ஒன்று உண்டு என்பதை, சொல்லாமல் சொல்லி,
(ரகஸ்யமாக) விளக்குவோர் எம் ரிபு! இச்சரீர
ங்களுக்கு, சற்று விளக்கம் தருகிறோம். உணர்வீர்!

1. தூலசரீரம்:— இது பஞ்சபூதங்களால் (மண்,
ஜலம், நெருப்பு, வாயு, ஆகாயம்.) பண்ணப்பட்டது
ஆகும். மண்ணும் ஜலமுமே முக்கியத்துவமும்,
முதலிடமும் பெறுகிறது. இதனை ஜலம் புண்ணியம்
என்றும், மண் பாபமென்றும், இப்புண்ணியபாப
மிரண்டும், நல்வினை, தீவினை, யென்றும், சொல்லப்
படுகிறது. இதுவே ஜனனமரண வித்து ஆகும்!
இதுவே தூலசரீரமாகும்.

2. சூட்சும சரீரம்:- இது மனோ வடிவமாகும்.
இதற்கு எண்ணமே, (கற்பனையே) மூலதனமாகும்.
இந்த கற்பனையை சொல்லும் போது, ஸங்கல்ப விகல்பம்
(கற்பனையும், மாற்றுணர்வும்) என்றும், எண்ணுவது "
மனம்" என்றும், அதை செய்வது நுண்உடல்
என்றும் சொல்லலாம். இங்கு மனமே சூட்சும சரீரமாகும்.



**3. காரணசரீரம்:—** ஆத்மாவுக்கு வடிவம் இல்லைதான். இருந்தாலும், வாக்கியார்த்த விளக்கம், கொடுப்பதற்காக, ஆத்மாவை ஜீவபோர்வை (நான் பந்தப்பட்ட ஓர் ஜீவன் என) மூடியிருக்கிறது. இது ஓர் கற்பனையே. ஆனாலும் இக்கற்பனை வடிவத்தையும், ஓர் சரீரமாக சொல்லப்படுகிறது. ஜீவபோர்வை காரணசரீரமாகும்.

**4. மகாகாரணசரீரம்:—** இது **"ஸத்குரு"** வடிவமாகும். இது தூலமுமல்ல! சூட்சுமமுமல்ல! காரணமுமல்ல! ஸ்ரீபகவான் வடிவாகிய **மாயாவும் அல்ல! "ஒலி & ஒளி"** (வாயுவும், ஆகாயமும்) இணைந்த வடிவமாகும்!

இந்த ஒலி, ஒளி இரண்டும், (கோள்கள்) இரண்டறகலந்த நிலையில் கோடானுகோடி அண்டரண்ட பிரம்மாண்டங்கள் அனைத்திலும், ஊசிநாட்ட இடம் இல்லாமல், எங்கும் **"ஸர்வவியாபியாக"** நிறைந்திருக்கிறது. இங்கு ஸத்குரு சொரூபமே மகாகாரணசரீரமாகும். முன்பு சொன்னபடி, ஆகாயம் உடல் என்றும், வாயு இயக்கம் என்றும், சொன்னதன் காரணம்? இது **"பரசொரூப ஓர் அங்கம்"** என சொல்லலாம்!



இதற்கு எங்கும் "கண்ணும், காதும்" உள்ளதென்று "பிரம்மஞேயத்தில்" கூறப்பட்டிருக்கிறதென ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

உடல், உலக பொருள், போக, மோஹமென்னும், பேர், புகழ், பட்டம், பதவி, பணம், மண், உறவு, நட்பு ஆகிய பிறவற்றில் உணர்ச்சிகளில் சிக்கிய உள்ளங்களுக்கு, மேலே கூறிய அனைத்தும், "கற்பனைக் கட்டுரையாக", உணர்வுமயமான "ஸத்தியவாக்காக", தோற்றமேயன்றி தெரியவே தெரியாது என, தன்னை உணர்ந்த அனுபவ ஞானிகள் கூறுவர். காரணம் ???? இவர்களுக்கு → (மெய்யுணர்வாகவே இருக்க எவரும் முனைவதில்லை)

"போகமோஹம்" மனக் கண்ணாகும்! ஆத்ம ஞானிகளுக்கு "நம்பிக்கை வைராக்கியத்தின்" "அடக்கம்" அறிவுக் கண்ணாகும்!

இந்த அறிவுக் கண் பெறுபவர் வெகு வெகு வெகு துர்லபம்!





உ

ஓர் அனுபவத்தை நீங்களும் உணரலாம்.

கடந்தகாலத்தில், ஓர் முக்கியசம்பவம் ஒன்று நடந்திருக்கிறதென வைத்துக் கொள்ளுங்கள். அந்நபர் ஆணோ, பெண்ணோ அக்காட்சி, உங்கள் உள்ளத்தில், பதிவான ஒன்றுதான்.

இப்போது, பல காலம் ஆனாலும், அச்சம்பவத்தை, உங்கள் "மனக்கண்முன்" உங்களால், கொண்டு வர முடியும்.

1. அச்சம்பவ நிகழ்ச்சிகளில், அந்த காலங்களில், உள்ள நபர்களோ, பொருள்களோ, நீங்கள் எண்ணிய "இந்த விடையே" உங்கள் மனக்கண் முன், அப்படியே நிலை பெற்று நிற்கும். கொண்டுவரவும் முடியும்.

2. அது சமயம் நடைபெற்ற "உரையாடல்" (ஒலிஅலைகள்) "இந்த விடையும்" நீங்கள், உங்கள் மனச் செவி மூலம், கேட்டு அனுபவிக்கவும் முடியும். ஆனால்???

"நடந்தது என்றோ ஒன்று" "அதன்" ஸ்பஷ்டமான, அனுபவமோ "இன்று"ம் உங்களால் அனுபவிக்க முடிகிறது.



உ



ஆஹ்???

அன்று இருந்த "ரஜோ-தமோ"! கோர குண கோஷ்டி விருத்திகள், இன்று இல்லையே, காரணம் என்ன?

அன்று "ஸ்தூல காட்சிகளோடு" உங்கள் மனம், சம்பந்தம் கொண்டு போராடியது. இன்றோ "சூட்சும காட்சிகளாக"! இருப்பதால், மனம் போராட இடம் இல்லை! அதேபோல் இன்று நடைபெறும், காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும், உங்களுக்கு அன்னியமான "ஸ்தூல நாமரூப" சம்பந்தம் கொள்ளாமல், உங்கள் ஸ்வய சொரூபமான "சூட்சும நாமரூப" ஸ்ரீபகவானிடம், சம்பந்தம் கொண்டு விட்டால், காட்சி நிகழ்ச்சிகளின், பாதிப்பும் இராது. மனோபாரமும் ஆகாது. வினைகளும் தொடராது.

ஸ்ரீபகவான் சம்பந்தம்:- எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! எல்லாம் நன்மைக்கே! "அவனன்றி அணுவும்" அசையாது. என உங்கள் மனதை, முடித்துக் கொள்ளுங்கள். மனம் சாந்தியும், அமைதியும், ஆனந்தமும் பெறும்!



# "இதை உணர்க!"

"மண்ணில்" (கருக்குழிக்குள்) இருந்து! மண்ணில் (பூமியில்) பிறந்து! "மண்ணையே" (உணவை) தின்று! "மண்ணையே" (பணத்தை) தேடி! "மண்ணையே" (வீட்டை) மனை கட்டி! "மண்ணையே" (பெண்ணை) மணமுடித்து! "மண்ணையே" (பிள்ளைகளை) பெற்றெடுத்து! "மண்ணையே" (உறவு, சுற்றம், நட்பு என) நம்பி ஏமாந்து! "மண்ணிலேயே" (பேர், புகழ், பட்டம், பதவிக்காக) அலைந்து! வீண் காலம் கடந்து, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, என ஏமாற்றத்துடன்; "மண்ணோடு மண்" ஆவதற்கா, பிறந்தாய்???????

ஸ்ரீபகவானை நம்பு நலம் பெறுவாய்! குருவை நம்பு முக்தி அடைவாய்!



உ

"வெண்ணெ" யோகம்பொருளாத எண்ணிறைல், அது "மெணாழி" யின் சொரூபத்தில், "வினைகளை" பெருக்கும். அதே வெண்ணெ, சிசுவைசுடி என்ற நிலையில், ஸ்ரீபகவான் தந்த, உபகார கர்த்தா என எண்ணி அதை ஸ்ரீபகவான் என "மதிப்பு, மரியாதை." இவைகளுடன், "நம்முன்" மட்டும் வைத்துக்கொண்டால், அவர் நம் ஸ்ரீ "அன்னை" ஆவார். அங்கு "வினை" பெருகாது. அவன் பார்த்துப்பன்!

"எண்ணத்தால்" (மனதால்) வினைவது, "வினை" ஆகும்! "தூயத்தால்" அவ்வினைகளை, பாரபசுடி தோஷம் இல்லாமல், விதிதாச் சாரப்படி, நடத்திமுடிப்பது, "விதி" யென்ற காலதேவன் ஆகும்! வினை பெருகாமல் இருக்க வேண்டுமானால்?

"காண்பதிலும், கேட்பதிலும்," அது பற்றி "பேசுவதிலும்"! சர்வ ஜாக்ரதையாக இருந்தால், வினை பெருகாது.

உ

## 4. அவஸ்தைகள் 5 (50)



கண்ணால் காண்பதையும், காதால்
கேட்பதையும், "உண்மை" யென
நம்பி, முடிவு செய்யலாகாது. "இறை
குரு" உணர்வோடு, இரண்டொரு விநாடி,
பொறுமையுடன், "அமைதி" காத்தால், அவஸ்
யமாக, அதன் முன்பின் விளைவுகள், தோற்றும்
வகைக்கு, ஸ்ரீ பகவான் கிருபை செய்வான். அங்கு பொறு
மையே, நம் கவசமாகவும், நம் ஆவரணமாகவும், திகழ்
கிறது. இது இப்பைத்தியத்தின், ஸ்வய அனுபவமாகும். வினை, விதி, மனம்
இப்படி பொறுமையுடன், செயல்படுவதால்,
முதலியவற்றின், "மயக்கத்திலிருந்து" விடுபடலாம்.
ஆம் மனதிற்கு, ஐந்து அவஸ்தைகள், உண்டு எனச்
சொல்லுவார்கள். அவைகள்:- ஜாக்ரதை, சொப்
பனம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம், எனச்
சொல்லும், முன் மூன்றும், (ஜாக்ரதை, சொப்பனம், சுஷுப்தி)
அனைவரும் அறிந்ததே. இந்த துரியம், துரியாதீதம்,
என்பதை "ஞானிகள்" முறையே "வாயு"
"ஆகாயம்" எனச் சொல்லுவார்கள்.
இந்த வாயு என்ற காற்றையும், நிர்மலமான ஆகாய
த்தையும், சற்று விளக்குகிறேன். உணர்வால் உணர்க.



உ



யுகாந்திரம் பிரளயமானது :—
மண்ணாலும், ஜலத்தாலும், அக்கினி
யாலும், காற்றாலும், அழிவு
உண்டு என, அனுபவ ஞானிகள் கூறுவர்.

1. மண் என்றால், பூகம்பம், பூமி அதிர்வு, என
“**பூமியின் பிளவினால்**” வரும்
அழிவு ஆகும்.

2. ஜலம் என்றால், ஆகாய கங்கையும், பாதாள கங்கை
யும், சமுத்திரங்களும், பொங்கி எழுந்து, ஆர்ப்
பரித்து, ஜலத்தினால், உண்டாகும் அழிவு ஆகும்.

3. அக்கினி என்றால், சூரியாக்கினி, காட்டாக்கினி,
காலாக்கினி, என்னும், “**மேலாக்கினி**”
யினால் அழிவு ஏற்படும்.

4. காற்று என்ற வாயு என்றால், சண்ட மாருதம், பிர
சண்ட மாருதம், சூறை, புயல், மஹாகால காற்று
என்னும், “**ஐவகை வாயுவினால்**”!
வரும் அழிவு ஆகும்.

5. ஆகாயத்தினால் அழிவு என்றால், இது அதிசூட்சுமமாய்
இருக்கும். இது “**ஞானம்ச அழிவு**”!
ஆகும். அதாவது உபாதை இல்லாத அழிவாகும்!



ஆகாய அறிவின் உ..........! (52)
விளக்கம்!

"ஸ்கைபுளூ" (ஆகாயநீலம்)

எங்கும், நீக்கமற நிறைந்திருக்கும் ஒன்றுகும். சமுத்திரமும், மலைகளும், சற்று தூரமான இடங்களும், இளமையான நீலத்தினை, பரவி இருப்பதையே, ஸ்கைபுளூ எனச் சொல்வதுண்டு. இந்த ஆகாயநீலமே, உலகமெங்கும், அண்டரண்ட பகிரண்டமுதல், அனைத்து கோடானு கோடி கோள்களிலும், உள்ளும் புறமுமாய், ஊசி நாட்ட இடம் இல்லாமல், ஸர்வ வியாபகமாய், நிறைந்திருக்கிறது. என்று சொல்வதைவிட,

"மண்"/ "மலை"/ "மரம்"/ "செடி"/ "கொடி"/ "புல்"/ "பூண்டு"/ 84 லட்சம் "ஜீவகோடிகளின்" (மனித இனத்தையும் சேர்த்து) ("நாம ரூபங்களும்) அனைத்து, "சரீரங்களும்"/ ஆகாயம் என்ற "நீலம்" இல்லாமல் இல்லவே இல்லை. அதாவது தோற்றங்களும், "ஆகாயநீலம்" இல்லாமல், அனைத்து சரீரங்களும், இல்லவே இல்லை!

அனைத்து ஜீவ கோடி சரீரங்களும், "இல்லாமல்" "ஆகாய நீலம்" பிரத்தியக்ஷமாக உண்டு. காரணம்???





ஆகாய நிலமே "யோகமாயா"!

ஆகும். அது தோற்றமாத்திரமேயல்லாது;

"உண்மையில் இல்லை"!

அது ஓர் "பிரபஞ்சமான காட்சி" ஆகும்!

அனைத்து அண்டங்களும், ஆகாயத்தினில் அழிவு உண்டாகும் நிலையில்? எப்படி அது நீங்கும் என்றால்?

1. (முன்சொன்ன) "அனைத்து நாமரூபங்களும்", ஜடசொரூப நிலையில், செயலற்று "ஸ்ப"; "சத்திர நிலையில்"! "அவை நிறு நின்றுவிடும்"!!!

2. பின் அனைத்தும் "சிலமணி" நேரத்தில் தாமே "மறைந்துவிடும்"!!! (வெய்யிலின் மஞ்சள் போல்)

3. அனைத்தும் மறைந்த நிலையில் (சொல்லி விளக்கமுடியாத நிலையில்) அது அது ஆன நிலையில், தாம் தாமே, ஸ்வயம் பிரகாசமாய்,



(54)

"பரம்ப்ரத்யக்ஷ" சொரூபமாய், உவமானத்திற்காக, "கோடானு கோடி" "சூர்யப்ரகாசமாய்," "அகண்டப்பேரொளியாய்!" நாம் தாமமாய் இருக்குமென, "அநுபவஞானிகள்," "கூறுவர்!!!"

அது அதுவாகவே இருக்கும். அதைக் காணும் நிலையோ, அதைக் கேட்கும் நிலையோ, அதைவிளக்கும் வாக்கின் நிலையோ, "ஒன்றுமில்லை!" ஆனால் "ஒன்றுண்டு!" என, அதன் அம்ச சொரூபமான, அனுபவ ஞானிகள், சொல்வதுண்டு. அது நமக்காக இப்படி, தன்னை வெளிப்படுத்திக் கொண்டால் தான். அதை உணரும் ஸ்ரீமஹான்களால் உணர முடியும்.

இதன் அனுபவம் என்னவென்றால்; அதுவே ஸ்ரீமஹான்கள்! ஸ்ரீமஹான்களே அது!!



வாஷிஸ்டத்தில், எம் ஸ்ரீ வஷிஸ்டர்,
ஸ்ரீ ராமனுக்கு, சொல்லும் போது???

ஒன்றுமில்லாததில், ஒன்றுண்டா
யிற்று. (அது தனக்குத்தானே தோற்றம் உண்
டாக்கிக் கொண்டது) அதுவே தனக்
குத்தானே, ஈஸ்வராதிகளாகவும், ஜகத்தாக
வும், அனந்த ஜீவகோடிகளாகவும், தோற்று
வித்துக் கொண்டு, தன் லோகமாயாவின்,
காமார்த்திய "மனத்தை" தமக்குத்தானே
விளையாடிக் கொண்டிருக்கிறது. இதுவே
பிரம்மரகஸ்யமாகும். என்றார் எம் வஷிஸ்டர்.

இம்மனதின் "விகார, விவகாரமே"
மனம் படைத்தோருக்கு "பிரபஞ்சமாக"
தோற்றுகிறதே யன்றி, உண்மையில் இவை ஒன்றுமில்லை

"எங்கும்", "எந்நிலையிலும்", "எந்த
விதத்திலும்" ஆனந்தமே!!!

இனி முடிவுரைக்கு வருவோம்:- முன்பு கூறிய நிலை
யில், பிருதிவி, ஜலம், அக்கினி, வாயு, ஆகிய நான்
கிலும், நாற்பத்தி ஒரு சதுர்யுகங்களுக்கும்,



உ



வரிசைக் கிரமமாக, அழிவு உண்டு.
இவை அனைத்தும், யுகாந்திர பிரளயம் ஆகும். முடிவில் நாற்பத்தி
எட்டாவது, சதுர் யுகத்தில், வருவது

"மஹாப்பிரளயமாகும்"!

இந்த மஹாப்பிரளயத்தில் தான், முன் கூறிய நிலையில், "ஆகாயநிலை" அழிவு உண்டாகும்.

"மஹாயோகிகளுக்கும்"!
"சித்தபுருஷர்களுக்கும்"!
"விஞானி" அழிவதில்லை! ஆகவே அவஸ்யம் ஜன்மம்
உண்டு! அவர்கள் யோகானந்தம் என்ற நிலையில்,
வார்த்தையின் விளக்க நிலையில், வடவாவ விருட்சம்
என ஒன்றின், வடபகுதியில், தங்கி இளைப்பாற இடம்
உண்டு என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள். இந்நிலை
பெற்றவர்களுக்கு, நாற்பத்தி ஒரு சதுர் யுகத்திலும்
அழிவில்லை, ~~இவர்கள் இருப்பிடம்~~ "பிரம்மன்" சிருஷ்டிக்கும்,
அப்பாற்பட்டதாகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்.



உ

67

நாற்பத்தி எட்டாவது, சதுர் யுகத்தில்
அனைத்தும், அந்த ஒன்றாகிவிடும்.
இவர்களின் தூலஉடல், காலத்தினால்
அழிந்தே தீரும். ஆனால் சூட்சும உடல்,
என ஒன்றினால் இவர்கள் இயங்க முடியும். இந்த
சூட்சும உடல், வாயு சம்பந்தம் கொண்டதாகும்.
இவர்களுக்கு வினை பெருகுவதில்லை. சஞ்சிதம் என்று
ஆகி, இவர்களுக்கு அழிவதில்லை! அந்த சஞ்சிதம்,
என்ற ஆகியமைப்! இவர்கள் ஜன்மா
பெற வாய்ப்பு உண்டு என, ஸ்ரீமஹான்கள் கூறுவர்.
ஆனால் தன்னை உணர்ந்த, ஆத்ம ஞானிகளிடம்,
மூவினை, மும்மலம், முக்குணம், மூவாசை,
ஆகிய இந்த பன்னிரண்டும், முழுமையாக அழிந்
த தன்மையினால், ஜன்மா இல்லை! யோகிகளிடமும்,
சித்தர்களிடமும், நாமரூப ஜகமயக்கம் என்
னும், அபிமானம்! அனுபவமும்
இல்லவே இல்லை! இருக்கவும் கூடாது, இருக்கவும் முடியாது!





ஆணவம் "நான்", "எனது" என்ற, அஹங்காரமும், அதிகாரமும் ஆதிக்கமும், அழிவதில்லை. இவைகளே, இவர்களின், சஞ்சித கர்மா என்னும், ஆதியை அழிய விடாமல் செய்து கொண்டிருக்கிறது. ஆணவம், "மண்", "பொன்", "பெண்" என்னும் மூவாசையும், இவர்களிடம், அவசியம் அழிந்தே ஆகவேண்டும்! (அவைகாரணமாக) ஆணவம், இவர்களிடம், "ஸ்ரீபகவான்" என்ற (நாமரூப இறைவன்) அவசியம் இருக்க முடியாது. இருக்கக்கூடாது. இவர்கள் "அயக்கமும், அருப்பும்" "வாயு தான்"! இவர்களின் ஸ்தூலஉடல், விதிவசத்தால் மறைந்தாலும், "வாயு" உடலே, இவர்கள் ஏற்றுக் கொள்வதால், அரூபமாக இவர்கள், எங்கும் சஞ்சாரம் செய்யலாம்! சில இடங்களில், இவர்கள் அஹங்காரத்துடன் செயல்படுவதால், வலிய கர்மாவை ஏற்றுக் கொண்டு,



உ

அதை சஞ்சிதத்துடன், சேர்த்துக் கொள்கின்றனர் என, ஸ்ரீ மஹான்கள் வாசகம் அமைகிறது.

"சித்தர்களும்", "யோகிகளும்", "வாயுவை!" நமக்கு சரீரமாக, ஆக்கிக் கொண்டு, சஞ்சாரம் செய்கிறார்கள். ஆனால் தன்னை உணர்ந்த, ஆத்ம ஞானிகள், "எச்சரீரமும் இன்றி" பிரம்மானந்த சமுத்திரம் என்ற, பரசொரூபத்தில், உப்புப் பதுமையென, கரைந்து கலந்து மயமாகி விடுகிறார்கள். இதுவே அனுபவ ஞானிகளின், லட்சிய வாக்காகும்! "அதையும்????"

நாவாதீத பரசொரூபத்திலிருந்து, "அருள் கருணையால்!" அது அனுப்ப வரும், எங்கோ "ஒன்றிரண்டு" ஸத்குரு சொரூபம் மட்டும்!! "ஜீவ அழிப்பின்!" நிமித்தமாகவும், சஞ்சார நிமித்தமாகவும் அதிரகஸ்யமாக,



"யோகமாயாவை"! பயன் படுத்திக் கொண்டு, வாயுவும், "ஆகாயமும்"! இணைந்த ஓர், "மஹா காரண சரீரம்"! தாங்க முடியும் என, ஸ்ரீமஹான்களின் அனுபவபாடகம் இருக்கிறது. இந்த சரீரம், எப்படி இருக்கும் என்றால்? "ஆகாயநிலம் உடலாகவும், வாயுவை சஞ்சார" நிமித்தமாகவும் பயன் படுத்த முடியும் என, ஸ்ரீமஹான்களின் வாக்காகும். இது பிரம்ம ரகஸ்யமாக, பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தான், பரசொரூப பிரத்யட்ச ஞானிகள், செயல்படும் நிலையில், ஜீவன் முக்தி அடைந்த ஸ்ரீமஹான்களையும், யோகமாயாவின் சகாயத்தால், பக்குவ ஆன்மாக்களுக்காக, பரோபகாரமாக, பரகருணைநிலையில், சில அதீதமான நிலையில், ரகஸ்யமாக செயல் படவைத்து, ஆத்ம ஞானுபவங்களை, கொடுக்கமுடியும் என்பதை,



உ



ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறோம். அந்த விந்தமான "ரகசியார்த்தங்கள்" புராண இதிகாச

வேத, வேதாந்த, சாஸ்திர, உபநிஷத்

மந்திர, தந்திர, யந்திர நூல்களிலும் இல்லை!

ஆகவே "ஸ்வய அநுபவம்" நூலில் வராது. வரவும் முடியாது.

காரணம் நூல் விஷயங்கள், சில நுட்பமானதை, "தேவரகஸ்யம்"! என சொல்வதுண்டு.

அதனினும் அதீதமான, ஞானாநுபவம்

தேவ தெய்வ நிதிகளிலும், அதி அதீதமானதாகும்.

~~இது பிரம்மரகஸ்யமாகும்~~

இதை அநுபவி ஞானிகள் மட்டும் உணர்வர்.

மற்றும் நூல் அறிவினால், பெறுபவை அனைத்தும், "இக்கலியுகத்தில் மட்டும்!

சாஸ்திர ஞானமாக (வாய் ஞானமாக) இருக்கும்!

மற்றைய முந்தைய மூன்று யுகங்களிலும், அநுபவ ஞானிகளே, $\frac{90}{100}$ இருந்தனர். ஆனால் இந்த

கலியுகத்தில், இன்றைய நிலையில் $\frac{10}{100}$ பேர்தான் இருக்க முடியும்.





உ

யாம் சொல்லும், இப் பந்து பக்குவ (அனுபவ ஞானிகளும்) ஆன்மாக்களும், "ஜீவன் முக்திக்கு" மட்டும் தகுதி உடையவர்களாகும், "ஸத்குரு" என்ற "பரசொரூபநிலை" பெற்றவர்கள்.

இல்லையென்றே, பிரமாணமாகச் சொல்லுவோம்!

ஆனாலும் இக்கலியின் கோஷம்? எப்படி இருக்கிறதென்றால்???

1. ஸ்ரீபகவான் ஊசியின் காது வழியாக, ஒட்டகத்தை போகவும் வரவும், செய்து விளையாடுகிறார் என்றால்? ஊசித்துவாரம் எங்கே? ஒட்டக பருமன் எங்கே? என, ஆராய்ச்சி செய்யும் காலம், இக்கலி காலம்! அன்று ஒருவன் நம்பினான். அவன் ஸ்ரீபகவான்நிலையை பெற்றான்.

2. அன்று சந்தனக்கட்டையை ஸ்ரீ குருதேவர் கொடுத்தாலும், அதை உரசி சரிபார்த்து, ஏற்கும் கலிகாலம் இது. அன்று சாதாரணக்கட்டையை, ஸ்ரீ குருதேவர் கொடுத்தாலும், அதை உரசாமலேயே, நம்பிவாங்கினான் ஒரு மாணவன், அது சந்தனக்கட்டையாக மாறியது.

3. ஸ்ரீபகவானின் மூச்சுக்காற்றே, வேதம் என்கின்றனர் பண்டிதர்கள். ஆனால் அதே பண்டிதர்கள், ஸ்ரீபகவானையும், அவன் வாய்மொழியையும், நம்ப மறுக்கின்றனர். அவன் மூச்சுக்காற்றாகிய, வேதத்தை நம்புகின்றனர்.



உ

(63)

இக்கலியுக ஸாஸ்திர ஞானி!

காற்றை நம்புகிறான். ஆனால் கடவுளை நம்புவதில்லை.

தன் முயற்சியை, நம்புகிறான்.

ஆனால் பரிபூரண சரணாகதியை, நம்ப முடிவதில்லை!

தன் முயற்சியில், "அஹங்காரம்" உண்டு! சரணாகதியில் "ஸ்ரீபகவானின் கருணை உண்டு"!

தனது மன முயற்சியினால் பிரம்மாப்யாசம், தவறாது செய்தால், அனைய பரவுணர்வு எளிதாக எய்தும். என்றான் எம் ரிஷி முனிவன்.

இங்கு தனது மன முயற்சி, என சொல்வது????

"ஸ்ரீமஹான்களின் வாக்கில் "பரிபூரண நம்பிக்கையாகும்"!

நம்பினோர் கெடுவதில்லை! என்ற ஸத்திய வாசகமானது "அன்றும்"! "இன்றும்"! "என்றும்"!

லௌகீகத்திற்கும், தெய்வீகத்திற்கும், பரமார்த்திகத்திற்கும்.



உ

(64)

அசைக்க முடியாததான, "ஓர் நம்பிக்கை" ஆகும் என, ஸ்ரீ மஹான்களின் அனுபவ வாக்காகும்.

# 5. "நம்பிக்கை"!

ஓர் குழந்தையை, பெற்றெடுத்த தாய், தன் கணவனை, இது தான் உன் தந்தை என்கிறாள். அக்குழந்தை தாய் வாக்கை, "நம்பியே" ஆகவேண்டும்!

அத் தந்தை குருவைச் சுட்டிக் காட்டி, இதுவே உன் குரு என்கிறார். அக்குழந்தை, அக்குருவை "நம்பியே" ஆகவேண்டும்!

அக்குரு அக்குழந்தைக்கு, நிலைகண்டு, உபாசனா மூர்த்தியாகிய ஓர் தெய்வத்தை (கற்பனை சொரூபத்தை) சுட்டிக்காட்டுகிறார். அக்குழந்தை, அந்த கற்பனை சொரூபமான தெய்வத்தை "நம்பியே" ஆகவேண்டும்!

அந்த தெய்வ பலத்தால், "அதுவே" ஸத்குருவாய் வரும். அல்லது ஸத்குருவை, சுட்டிக்காட்டும். அக்குழந்தை, ஸத்குருவை நம்பியே ஆகவேண்டும்.

அந்த ஸத்குரு, ஜீவன் முக்தியின் நிலைக்கும், மனவாக்குக்கு எட்டாததான, தாவராதீத பர சொரூப நிலையை, சொல்லாமல் சொல்லி, காட்டாமல் காட்டி, உணர்வால் உணர்த்துவார். அக்குழந்தை அதை, "நம்பியே" ஆகவேண்டும்!



உ

# "பரிபூரண நம்பிக்கையே.

மேலே கூறிய ஐந்திலும் ஏதேனும் ஒன்றில்
சந்தேகம் கொண்டாலும் உண்மை மறைந்துவிடும்

# "பரிபூரண சரணாகதி"!

(இதுவே தனது மன முயற்சியாகும்)

ஆகும். என ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்

# "ஏன்? எதற்கு? எப்படி? எங்கு?"

என ஸ்ரீ பகவான் வாக்கையோ, ஸ்ரீ ஸத்குருவாக்

சந்தேகம், கலக்கம், பயம்,

கையோ, நம் குற்றம், குறை ↑ நிறைந்த தான,

# "புத்தியினால்"

அவசிய, ஆராய்ச்சிகள்

நம்பிக்கை துரோகமாகும்.

செய்தால், அது நம்பிக்கையுமல்ல! ↑ சரணாகதியும்

அல்ல. இதைத்தான், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்

பாதாள், தம் பஜகோவிந்தத்தில், அழுத்தமாக

அடி ஆழமாகவும்,

வும், ↑ திருத்தமாகவும், பசுமரத்தாணி போலவும்.

சொல்கிறார். "பஜகோவிந்தம்!

# "பஜகோவிந்தம்! கோவிந்தம் பஜ மூடமதே"!

என்றார்.

அதாவது கோவிந்த நாமாவை இது எந்தகையது? என்ன



உ

செய்யும்? இதனால் என்ன லாபம்? இது ஏன்? இது எதற்கு? இது எப்படி பலன் தரும்? இதை நம்பலாமா? இது எவருடைய நாமா? இதை எவர் சொன்னது? இதன் பலன் என்ன? என இன்னமும், அனேக "சந்தேக", "விபரீத", "விசித்திர", "விதண்டா", கேள்விகள் கேட்டு, கேட்டு, குழப்பமடையாதே! இங்கு "நம்பினோர் கெடுவதில்லை" என, ஸத்தியப் பிரமாணமாகச் சொன்னார். ஆனால் இக் "கலியுக" கேள்விகள் கேட்காமல், வாழ முடியாது, என்ற நிலை ஆகிவிட்டது. ஆகவே "ஆன்மீக" தாகமும், வேட்கையும், உள்ள எந்த குழந்தையானாலும், நம்பிக்கையில் தளர்ச்சி வேண்டாம் என, உங்கள் பாதங்களை பற்றி, பணிவுடன், வேண்டிக் கொள்கிறோம்!



உ

(67)

நம்பிக்கையினால், பணிவு, கருணை,
பொறுமை, கனிவு, இனிமை, அன்பு
குணங்களை அறிவது, மன்னிப்பது, விட்டுக்
கொடுத்து நாம் விலகுவது, தானே சித்திக்கும்.
நம்பிக்கையினால், அஹங்காரம், அதிகாரம்
அபிமானம், ஆதிக்கம், உடைமை உரிமை பாராட்டுதல்,
இவைகள் தானே நசிக்கும்.
நம்பிக்கையினால், பேர், புகழ், பட்டம், பதவி, போட்டி,
பொருமை, இவைகளுடன், வியாபாரம், விளம்பரம்,
ஆடம்பரம், முதலியவை தானே நசிக்கும்.
நம்பிக்கையினால், நான், என்னால், என்னுடையது,
என்பது மாறி, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்!
எல்லாம் உன்னுடையதே! என்ற சரணாகதி நிலைக்கும்
நம்பிக்கையினால்! குரு சிஷ்ய
பாவனை உறுதியாய் நிலை பெறும். இறைகுரு
நம்பிக்கையினால்! பக்தியும்,
ஆத்ம ஞானமும் பரிபூரணமாகும்! இது உறுதி.



(68)

# 6. "நனவு" "கனவு" "சுஷுப்தி" "சுத்தம்"!!!!

நனவினில் கனவு இல்லை ........

கனவினில் நனவு இல்லை ........

நனவு, கனவு, இவ்விரண்டும் சுஷுப்தியில் இல்லை....

நனவு, கனவு, சுஷுப்தி, இம்மூன்றும் "சுத்தத்தில் இல்லவே இல்லை"!!

இவை வேத வேதாந்த கருத்தாகும். இதுபற்றி, சிறிய விளக்கம் தருகிறோம். உணர்வால் உணர்க!

**1. "நனவு":—** அது ஜாக்ரதாவஸ்தை எனச் சொல்லும், விழிப்பு நிலையாகும். இதுவே "கர்மா"வின், பெருக்கமாகும். எண்ணம், சொல், செயலால், கர்மா நிகழும் நிலையாகும். நாமரூப ஜகத்தில், எண்ணம் என்னும், "குணதோஷங்களால்" பின்னிப் பிணைந்து, விளையாடும் நிலையாகும். பிராப்தத்தின் படி, வினைகள் ஒழுங்காக நடந்தாலும், "ஆகாமிய" கர்மாவால், அவ் வினைகளை, "பலன்" ஏற்றி, அவஸ்தைப் படும் நிலையாகும். இருந்தும், கால்களால் நடந்தும், கைகளால் கொடுத்தும், இருப்பிடத்தில்



வாங்கியும், "வாக்கால்" "புலம்பியும்" கர்மாவை முடித்தும், "பெருக்கச்" செய்தும்; "ஜனன மரணச்" சங்கிலியால், நம்மை நாமே, பிணைக்கும் நிலையே நனவு ஆகும்!

உ. "கனவு":— இது சொப்பனம் எனச்சொல்லும், உறங்கியும், உறங்காமலும் "மனோஅவஸ்தையினால்" தவிக்கும் நிலையாகும்!

முன்பு பல ஜன்ம நிகழ்ச்சிகளையும், இச்ஜன்மாவில் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளையும், நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளையும்; "எண்ணத்தால்" கொணர்ந்து, அதை "T.V." படக்காட்சிகளாக்கி, அதைமனத் திரையில் ஓடவிட்டு, எவன் தயாரிக்கிறானோ அவனே, "மனமே" பார்த்து இன்பதுன்பமாக, அவஸ்தைப் படும் நிலையாகும். இது இறைவன் கருணையினால், "கர்மா" பெருகாமல் கர்மா நிகழும் நிலையாகும்.



உ



இங்கு???

"T.V." பெட்டி உடலாகும்!

"ஸ்கிரீன்" மனமாகும்!

"படக்காட்சி" முன் பின் பதிவேடுகள்!

"ரிமோட்" படுக்கும் போது நாம் எண்ணும் நாமரூப சம்பந்த

"குணதோஷ" எண்ண விருத்திகள்!

இதுவே கனவு என ஆகும்.

3. "சுஷுப்தி:— இது கனவு காணாத ஆழ்ந்த உறக்கமாகும். கருவிகளும், காரணங்களும், ஓய்வு பெறும் நிலையாகும். "மனம் ஆத்மாவோடு" கலந்து "உறவாடும்" நிலையாகும். (உறவு கொள்ளும்) (கலந்து என்றால், மனம் ஆத்மாவோடு, கரைந்து, கலந்து, மெய்யாகும் நிலையல்ல) உறவாடும் நிலை:— இதை "ஈஸ்வர" "அத்வைத ஞானிகள்" தரும் விளக்கம், எப்படி அமைகிறது என்றால்? இவ்வுவமானம், சற்று கவிதோஷத்தினை, (அசுசியாக) தோன்றினாலும், வேறு உவமானம், இதற்கு ஈடாக, தோன்றவில்லையென, இதையே கொடுக்கிறோர்கள். இவ்வேண்டுமையை மன்னிக்கவும்.



"ஆண் பெண், உடல் உறவையே",
இதற்கு இணையாகச் சொல்கிறார்கள்.

அந்நிலையில், "உடல் இரண்டு"

அங்கு உணரும் (காண்பதும் அல்ல, கேட்பதும் அல்ல, அது பற்றி பேசி விளக்குவதும் அல்ல!) இன்பம் "ஒன்று"!

இங்கு, சுசூப்தி எனச் சொல்லும், ஆழ்ந்த உறக்கத்தில்,
"ஆத்மா" என்ற புருஷோத்தமனுடன்,
"மாயா மனம்" என்ற அழகான பெண்,
கூடிக் களிக்கிறாள் என, பொருள் கொள்ளவாம்.

இங்கு இவ்விருவரும், பிரிந்தே ஆக வேண்டும்.

"அது மனோலயமாகும்!"

(இங்கு மனம் அழியவில்லை)

ஆனால் விசாரஞானத்தால், ஆத்மஞானம் பெற்றுவிட்டால், பிரம்மானந்த சமுத்திரம் என்ற, புருஷோத்தமனுடன், மாயாமனம் என்ற, அழகான பெண்தன்மை இரண்டறக் கலந்து மயமாகி விட்டது எனப் பொருள் கொள்ளவாம்!

"அது மனோநாசமாகும்!"



உ



சுழுப்தி நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில்) எவ்வித பயிற்சியும், முயற்சியும் இல்லாமல், இயல்பாகவே மனமும் ஆத்மாவும் லயமாகி விடுகிறது. மேலும் "குரு கிருபையினால், விசார ஞானம் பெற்று விட்டால், அது "சுத்தம் என ஆகிவிடுகிறது". இங்கு சுழுப்தியையே "துரியம்" என்றும்; அதனினும் அதீதமான, சுத்தத்தையே "துரியாதீதம்" எனச் சொல்லுவார்கள், அனுபவ ஞானிகள். வேறு துரியம், துரியாதீதம், இரண்டு யென்றே சொல்லுவராம். இந்த சுழுப்தியையே, "சாட்சி" என்ற "உணர்" நிலையாகவும், கொள்ளலாம். இந்த சாட்சி நிலை, மனித இனத்தை மட்டும் குறிக்கும். சர்வசாட்சி யென்பது, அனைத்து "ஜீவகோடிகளையும்" இணைக்கும்.

4. "சுத்தம்": — இதை சர்வசாட்சி என்றும், அகண்டாகார விருத்தி என்ற, "அகண்ட பாவனை" ஆகும். இதுவே அனுபவ ஞானிகளின் இருப்பிடம் ஆகும். காட்சி (தூல நனவு) நிலையில் கலக்க பயமும், மனோ கனவு நிலையில் மருட்சியும், சுழுப்தி என்ற உறக்கத்தில், தெய்வீக மயக்கமும், சுத்தம் என்ற,



உ

(73)

துரியாதீதம் என்ற, அகண்ட பாவனையில்,
"அதுநாம்! நாமேஅது!"
என்ற, "நற்போதம்" ஒன்றே
ஸ்வயமாக இருக்கும். இது சந்தேகம்,
கலக்கம், பயம், தெய்வ மயக்கம், இவை அனைத்தும் இல்லாத தான,
கனவின் முதிர்ச்சி,
ஓர் "தெளிநிலையே சுத்தம்" ஆகும்!
இந்த சுத்தம், தெளிநிலையாக இருந்தாலும், "அது"
என்றும், "நாம்" என்றும், இரண்டுபட்ட தன்மை
ஆகும். இந்த இரண்டுபட்ட சுத்தம் என்ற நிலையானது,
"சுவையும், பழமும்!" போன்றதாகும்.
சுவையும் பழத்தையும், எப்படி பிரிக்க முடியாதோ?
பழம் என தோற்றம் மட்டும் தோன்றி, சுவை என்ற உணர்வு,
எப்படி உள் அடங்கி யிருக்குமோ? சுவைத்து விட்டால்
பழம் எப்படி தோன்றுமோ? அந்நிலையே, அதுவே நாம்
நாமே அது என்ற நிலையாகும். இங்கு பழம் நாம்!
சுவை அது ஆகும்! பலவித உதாரணங்களின் கூட்டி,
அதுவே நாம்; நாமே அது என்ற, உணர்வை
தொகுப்பது துரியம் என்றும், சுவையின் நிலையை,
நாம் பெற்றுவிட்டால், எப்படி அதை "விளக்க
முடியாதோ" அது துரியாதீதம் எனவும்
சொல்லலாம்.



# 7. உ



ஸத்தியம் பேசுவோம். தர்மம் நிலை பெறும்!

என்பது ஸ்ரீ மஹான்களின், ஸத்திய வாக்காகும். இதன் உண்மை என்னவென்று? அனைவரும் பேசுவது "பொய்" "உரையே ஆகும்"! காரணம் "இறை உணர்வு"! இல்லாமல், வரும் வாக்கு அனைத்தும், பொய்யேயாகும். உதாரணம்?

கொடுத்தேன்! வாங்கினேன்! போனேன்! வந்தேன்! என "அஹங்காரத்தோடு" பேசும், அனைத்து வார்த்தைகளும், பொய்யேயாகும். நன்றாக கவனி:- உனக்கென, "இயக்கம் ஏது?" உனக்கென "இருப்பு ஏது?" உனக்கென "உடமை தான் ஏது?" இங்கு உனக்கென யாம் குறிப்பிடுவது, மார்தட்டும் உன் உடலை, குறிப்பிடுகிறோம். உன் உடலே, ஓர் வாடகைதாரவம். உன் வினைக்காக, இறைவன் கருணையினால், இங்கேயே எடுத்தாய். வினை முடிந்ததும், அது இங்கேயே, மறைந்துவிடும். உன் வினையின்படி, அனைத்து "நாமரூப" பொருள்களும், உன் வினையின்படி விளையாட கொடுத்தவையே. உன் "மனதால்" உரிமையோ, உடைமையோ கொண்டாடி, வினையை பெருக்க கொடுக்க வில்லை.



உ



ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு வாக்கிலும், "ஸ்ரீ பகவான் நாமாவை" உணர்ந்து பேசினால், அது ஸத்திய வாக்காகும்!

முதலில் கூறியபடி, வந்தேன், இருந்தேன், போனேன், கொடுத்தேன், வாங்கினேன், என்கிற வார்த்தைகள், "ஏன்? ஏன்?" என்று கேள்விக் குறியாகவே, முடிவடைவதைக் கவனி. இந்த "கேள்வியின் பதிலுக்காக"! நீ ஜன்மா எடுத்தே தீர வேண்டும். அதே வார்த்தை, ஸ்ரீ பகவான் உணர்வோடு, வந்தோம், இருந்தோம், போனோம், கொடுத்தோம், வாங்கினோம் என்று "பன்மையாக"! பேசும் போது, ஸ்ரீ பகவானையும் உன்னோடு, இணைத்துக் கொள்வதால் "குணதோஷ" நிவர்த்தியும், உண்டாகிறது. அதனால், வினையும் பெருகுவதில்லை. அதனால் ஜனன மரண பயமும் இல்லை! மேலும் அவ்வார்த்தைகள், முடிவில் "ஓம்" என்ற, பிரணவம் உச்சரிக்கப்படுவதால், அது மூலப்பிரகிருதியாகிய "யோகமாயாவுடன்"! கலந்து விடுகிறது.



(76)

இறப்பும், வினையும் இல்லை! ஜன்மாவும் இல்லை! ஆனால்???

"ஆரம்ப சந்நிதியில்!"

வந்தது (போனது) இருந்தது கொடுத்தது வாங்கியது எனத்தன்னை, ஓர் "அஃறிணைப்" பொருளாக்கிக் கொண்டால், மானவமானம், சூடு, சுரணை, லஜ்ஜை, வெட்கம், முதலிய "தூல அபிமானம்" நசித்து அழிந்து விடுகிறது.

அஹங்காரம் முதலில் அறுபட்டால், அபிமானம் பின்னால் தானே அறுபடும். அபிமானம் அறுபட்டால், உரிமை உடைமை ஆதிக்கம் அதிகாரம் இவை "தானே மறையும்" இது இவ் வைத்தியத்தின், ஸ்வய அனுபவமாகும்! மேலே கூறியபடி, உங்கள் அனுபவ வாழ்க்கையை கொண்டு வந்தால் அதுவே "ஸத்யம் பேசும்" நிலையாகும்.

அங்கு "ஸ்ரீமந் நிலைபெற்ற" நிலையாகும். அநித்யம் என்றே அது நவமே! அது சிவமே! அதுயாமே! அது நீயே! இது ஸத்யம்! ஸத்யம்! ஸத்யம்.

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!